# திருக்கோயில்


திங்கள் வெளியீடு

மாலை 1] விகாரி ஆவணி - 1959 செப்டம்பர் [மணி 12


## ஸ்ரீ லங்கா யாத்திரை

நம் நாட்டுக்கணித்தாயுள்ள ஸ்ரீ லங்கா அல்லது சிலோன் என்ற தீவுப்பிரதேசம் பன்னெடுங் காலமாக நம்மோடு தொடர்புடையது. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்வரை கப்பல்கள் மூலமாகத்தான் கடல் கடந்து அத்தீவுக்கு சென்றுகொண்டிருந்தோம். இராமாயண காலத்திலே வானர சேனைகள் தனுக்கோடியிலிருந்து பாலம் கட்டி இலங்கைக்குச்சென்றதாக வரலாறு கூறுகிறது. இப்போது இரண்டு மணி நேரத்துக்குள்ளாகவே சென்னையிலிருந்து ஆகாய விமானமூலம் கொழும்பு சேரும் வாய்ப்பு உள்ளது. ஸ்ரீலங்காத்தீவில் திருஞான சம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற இரண்டு தலங்கள் உள்ளன. ஒன்று தலைமன்னாரிலிருந்து சுமார் இருபது மைல் தொலைவிலுள்ள திருக்கேதீச்சுரம். மற்றொன்று திருக்கோணமலை. இது ஸ்ரீஇலங்கையில் வட கிழக்கு பக்கத்தில் ஒரு மலையின்மேல் கடற்கரையில் இருந்து இப்போது கடலில் மூழ்கிவிட்டது. இப்போதிருக்கின்ற மலையின்மேல் புதிதாக ஒரு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் கடல்கடக்கக்கூடாதென்ற மரபு இருந்தபடியால் சம்பந்தப்பெருமான் திரு இராமேசுவரத்திலிருந்தேஇந்த இரண்டு தலங்களைப்பற்றிய தேவாரப் பாடல்களைப் பாடியருளினார். எங்கள் இலங்கை யாத்திரையின் குறிக்கோள் இந்த இரண்டு பாடல்பெற்ற பதிகளையும் தரிசிக்கவேண்டுமென்பதே ஆயினும் முருகப்பெருமானுக்கு உகந்த கதிர்காம ஆடிவேல் விழாவையும் பார்க்க வேண்டுமென்ற விருப்பத்தால் 17-7-59-அன்று சென்னையிலிருந்து கொழும்புக்கு விமான மூலம் சென்றோம். பகல் 11-30 மணிக்கு விமானம் ஏறி, 1-10-மணிக்கு கொழும்பு விமான நிலயத்தை அடைந்தோம். விமான நிலயத்தில் சுங்க இலாகா பரிசோதனை முடிய சுமார் ஒரு மணி நேரம் ஆயிற்று. விமானங்கள் முதலிய விஞ்ஞான சாதனங்களினால் உலகம் மிகவும் சுருங்கியதாகக் காணப்பெற்றாலும் பல்வேறு நாடுகளினிடையே உள்ள அபிப்பிராய பேதங்களினால் ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டில் பிரயாணம் செய்வது கஷ்டமாகவே இருக்கிறது. அன்பின் அடிப்படையில் உலகம் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் உலகத்திலுள்ள எல்லா அறிஞர்களுடைய கோட்பாடு. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கொள்கை. 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்றார் அப்பர்சுவாமிகள். உலக மக்கள் அனைவரும் ஒன்று பட்டு வாழும் காலமே உலகத்தின் பொற்காலம் ஆகும்.

17-7-59 கொழும்பு விமான நிலயத்தில் இலங்கை வாழ் இந்திய மக்கள் திர




கதிர்காம முருகன் கோயில்

ளாக வந்திருந்தனர். அன்று மாலை கொழும்பிலுள்ள ஜிந்துப்பட்டி சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆடிவேல் திருவிழாத் துவக்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமையாதலால் இறை வழிபாடும் திருவிழாத் துவக்கமும் கோலாகலமாக நடத்தியதுடன் வார வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது. கொழும்பில் சுப்பிரமணிய சுவாமி ஆலயங்கள் மூன்று கொழும்பு கடற்கரையை ஒட்டிய கடைத் தெருவில் உள்ளன. இவைகளிலிருந்து ஆடிவேல் உற்சவமூர்த்திகள் இரதங்களில் ஆரோகணிக்கப்பெற்று வெள்ளவத்தையென்ற பகுதியிலுள்ள விநாயகர் ஆலயங்களுக்கு மேளதாள வைபவங்களுடன் பவனி சென்றது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஸ்ரீ இலங்கை கவர்னர் ஜெனரல் முதல் எல்லா மக்களும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு பிரபல நாதசுர வித்வான் காருகுறிச்சி திரு. அருணாசலம் முதலிய பல நாதசுவரக் கலைஞர்கள் பங்கு எடுத்துக்கொண்டார்கள். 18-7-59 காலை நாங்கள் கதிர்காமம் சென்றோம். அன்று மாலை மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன அதிபரும், திருமுருக கிருபானந்தவாரியாரும் கொழும்பு வந்து ஜிந்துப்பட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் தொடர்ந்து சில நாட்கள் நடத்தினார்கள்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் செல்லும் பாதை கடற்கரை ஓரமாகவே பெரும்பாலும் அமைந்திருக்கிறது. ஸ்ரீ இலங்கையிலுள்ள பெருஞ் சாலைகள் எல்லாம் நல்ல நிலைமையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ரோடு மார்க்கம் மோட்டார்காரில் பிரயாணம் செய்வோர்கள் முன்னும் பின்னும் வெகு தூரத்துக்கு மோட்டார்கார்களைத் தவிர வேறொன்றும் பார்க்க முடியாது. வழியிலுள்ள ஊர்களிலும், நகரங்களிலும் தவிர மற்ற இடங்களில் பாதசாரிகளையாவது, மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியவைகளில் செல்வோர்களையாவது காண்பது அரிது. மோட்டார்கார்களும் அநேகமாக இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே வாங்கப் பெற்றதாகக் காணப்பட்டன. கொழும்பிலிருந்து கதிர்காமம் போகும் வழியில் காலி என்ற துறைமுகப்பட்டினம் இருக்கிறது. அங்கு டச்சுக்காரரால் கட்டப்பெற்ற கோட்டையும் துறைமுகமும் பார்க்க அழகாக இருக்கின்றன. அங்குள்ள இந்திய மக்கள் ஒரு முருகன் ஆலயமும், விநாயகர் ஆலயமும் கட்டியிருக்கின்றார்கள். காலிக்கு வடக்கே மாத்ரை என்ற இடத்தில் கடற்கரையில் நல்ல அரசாங்க விடுதியொன்று இருக்கின்றது. நாங்கள் கொண்டுபோயிருந்த உணவை அங்கே அருந்தினோம். மாலை திஸ்ஸாமகாகிராமம் என்ற திஸ்ஸாமாராமா என்ற இடத்திலுள்ள புத்த விகாரைப் பார்வையிட்டோம். இந்த இடத்தில்தான் திசைமாறி கதிர்காமம் செல்லவேண்டிய புதிதாக அமைக்கப்பட்ட காட்டுப்பாதை வழியே சென்று சூர்யாஸ்தமனத்துக்கு முன்பே கதிர்காமம் சேர்ந்தோம். அங்கே நாங்கள் பார்த்த மோட்டார்கள் குறைந்தது 20,000 இருக்கலாம். சுமார் ஒரு மைலுக்கு அப்பாலிருந்து மோட்டார்கார்கள் பல தோட்டங்களிலே நிறுத்தப்பெற்றிருந்தன. சென்ற இரண்டு ஆண்டுகளாக உள்நாட்டுக் குழப்பம் காரணமாக இலங்கை வாழ் தமிழ் மக்களும் இந்தியாவிலிருந்து செல்லும் யாத்ரீகர்களும் மிகவும் குறைவாக இருந்ததாகவும் இந்த ஆண்டு இலங்கை வாழ் தமிழ் மக்கள்

மாத்திரமன்றி இந்தியாவிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். கதிர்காமத்தலத்திலே மிகவும் முக்கியமானது மாணிக்க கங்கை தீர்த்தம். இதில் சுமார் ஒரு அடி ஆழமே நீர் இருந்தாலும் கூட பல்லாயிரக்கணக்கான மக்கள் ஸ்நானம் செய்தபோதிலும் கொஞ்சம்கூடத் தண்ணீர் கலங்கவில்லை. மாணிக்கம்போன்று தெளிவாகவும் மனோரம்மியமாகவும் இருந்தது. எங்கள் குழுவிலிருந்த குளிர் தண்ணீரில் முழுகிப் பழக்கமில்லாதவர்கள் கூட மாலையிலும் நன்றாக ஸ்நானம் செய்து மறுநாள் அதிகாலை மூன்றுமணிக்கும் மகிழ்ச்சியுடன் ஸ்நானம் செய்தார்கள்.




வள்ளியம்மை கோயில் கதிர்காமம்.

கதிர்காமம் வேலன் ஆலயத்தை மிகவும் ஆர்வத்துடன் அணுகியபோது இங்கே அர்த்த மண்டபத்திற்கு முன் முருகன் வள்ளி தெய்வயானையுடன் மயில் மீது அமர்ந்திருந்த திரையைத்தான் பார்த்தோம். முருகன் ஆலயத்திற்கு வலதுபுறம் ஒரு விநாயகர் கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இதிலும் அர்த்தமண்டபத்திற்கு முன்னால் விநாயகர் உருவமுள்ள திரைதான் காட்சியளித்தன. இந்த விநாயகர் ஆலயத்தில் பூஜை செய்பவர் பூனா பக்கமிருந்து வந்து ஒரு அந்தணர். அவர் திரைக்குள்ளே சென்று மணியடித்துப் பூஜை செய்வது காண முடியாவிட்டாலும் மணியோசை காதால் கேட்க முடிந்தது. பிறகு வெளியே வந்து திரையிலுள்ள விநாயகர் உருவத்திற்குத் தீபாராதனை நடைபெற்றது. அதன்பின் அதே கற்பூரத் தீபத்தை எதிரிலுள்ள கதிர்காம மலைக்குக் காட்டி பூஜை முற்றுப் பெற்றது. எதிரே ஏழு மலைகள் இருப்பதாகவும், நடுவிலுள்ள பெரிய மலை உச்சியில் ஒரு வேல் ஊன்றப் பெற்றிருப்பதாகவும் சொல்கிறார்கள். அதன்பின் கதிர்காம வேலனுக்கு இதேமாதிரி திரைக்குள் மூலஸ்தான பூஜையும், திரைக்கு வெளியே கற்பூர தீபாராதனையும் நடைபெற்றன. அங்கும் எதிரிலுள்ள மலைக்குக் கற்பூர தீபம் காட்டப்பெற்றது. முருகனுக்கு நைவேத்தியம் கொண்டு வரும்போது சிங்களவபூஜாரி (கப்ராள்) ஈரத் துணியினால் வாயைக் கட்டிக் கொண்டு நடைபாவாடையில்வந்துபூஜை செய்கிறார். சட்டைப் போட்டுக்கொண்டிருந்தாலும் பூஜாரிகளுக்கு வேண்டிய அனுஷ்டானங்கள் செய்யாவிட்டாலும் பூஜை ஆரம்ப முதல் முடிவுவரை ஈரத் துணியால் வாயைக் கட்டிக்கொண்டு ஆசாரமாகப் பூஜை செய்வது பாராட்டற்குரியது. அன்று மூலஸ்தானத்திலிருக்கின்ற பெட்டியோ கூடையோ முழுதும் மூடப்பெற்று யானைமேல் பவனி வந்தது. அதில் ஏதோ சடாட்சரச் சக்கரம் இருப்பதாக நம்பப்படுகிறது. பவனி வருகின்ற வீதிகள் முக்கோணமாக அமைந்திருக்கின்றன. முக்கோணத்தின் எதிர் மூலையில் வள்ளியம்மைக்காக ஒரு தனிக் கோயில் கட்டப்பெற்றிருக்கின்றது. இங்கேயும் அர்த்த மண்டபத்துக்கு முன்பு திரையில் வள்ளியம்மை உருவம் அமைக்கப்பெற்றிருக்கிறது. மூலஸ்தானத்தில் பூஜை நடப்பதை மணி ஓசை மூலமாகத்தான் தெரிந்து கொள்ள முடியும். யானைமேல் பவனிவரும் பெட்டியையோ கூடையையோ பார்க்க முடியாத நிலையில் நன்றாக மூடி வள்ளியம்மை ஆலயத்துக்கு எடுத்துச் சென்று கர்ப்பக் கிரகத்தில் வைத்துப் பூஜை செய்வித்து மறுபடியும் ஊர்வலம் கதிர்காமம் முருகன் ஆலயத்தை அடைந்தது. ஏராளமான மக்கள் சட்டிகளில் வேப்பிலையும் கற்பூரமும் வைத்து ஆடிச் சென்ற காட்சி மறக்க முடியாத தோன்றும். காவடிகள், சிங்களப்

பெண்கள் ஆடல் பாடல்கள் கண்ணைக் கவரும் வகையில் அமைந்திருந்தன.

கதிர்காம முருகன் ஆலயத்திலுள்ள விநாயகர் கோயிலின் வலதுபுறம் ஒரு புத்தர் கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது. அதில் நாராயணன் முருகன் படங்களும் இருக்கின்றன. பின்புறமுள்ள அரச மரங்களில் ஏராளமான துணிகளை சிங்களவர் கட்டித் தொங்கவிட்டிருக்கின்றனர். பின் பிரகாரத்தில் அநேக ஆண் பெண் உருவங்கள் திரைகளில் காணப்படுகின்றன. இவையெல்லாம் புதிதாக அமைக்கப்பெற்றவை என்று தெரிகிறது. கதிர்காம முருகன் ஆலயத்திற்கு இடது புறம் ஒரு தனிக் கோயிலில் தெய்வயானை அம்மை பஞ்சலோக உருவம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றது. அங்கும் மூலஸ்தானத்தின் தினசரி பூஜை திரைக்குப் பின்னுலேயே நடைபெறுகிறது. நித்திய பூஜை யெல்லாம் முன் தொங்கும் திரை உருவத்திற்குத்தான் நடைபெறுகிறது. ஒன்றிரண்டு சமயங்களில் மூலஸ்தானத்திலுள்ள உருவம் காண்பிக்கப் பெறும் என்று சொல்கிருர்கள். இந்த ஆலயத்தின் முன் பாகத்தில் சில சமாதிகள் காணப்படுகின்றன. இங்கு பூஜை செய்பவர் பூனு பக்கமிருந்து வந்திருக்கும் அந்தணர். தெய்வயானை அம்மை ஆலயத்திற்கு வலதுபுறம் பழனியாண்டவர் ஆலயம் ஒன்று அமைக்கப்பெற்றிருக்கிறது. அங்கும் முன்புறம் பழனியாண்டவர் உருவமுள்ள திரை தொங்கிக் கொண்டிருக்கிறது. எப்போதும் மக்கள் இந்த ஆலயத்தில் இருந்து கொண்டு முருக பஜனை செய்து கொண்டிருக்கிருர்கள். வள்ளியம்மை ஆலயத்தினருகே முத்துலிங்க சுவாமிகள் என்ற பெரியாரின் சமாதி சிவலிங்கமும் ஒரு சிறு கோயிலில் அமைக்கப்பெற்றிருக்கின்றது. ஆடி வேல் உற்சவ காலத்தில் இங்குள்ள உற்சவரையும் ஊர்வலமாக எடுத்துச் செல்லுகிருர்கள். வள்ளியம்மை கோயிலுக்கு வலது புறம் பாலுபாவா என்ற ஒரு மகம்மதியப் பெரியாரின் சமாதியும், மசூதியும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அங்கும் நட்சத்திரங்கள், பிறையுடன்கூடிய திரை முன் பக்கம் காட்சியளிக்கிறது.



புத்தவிகார்-கதிர்காமம்

கதிர்காமம் முருகன் கோயிலுக்குப் பின்புறம் கொஞ்ச தூரத்தில் ஒரு புத்த விகார் இருக்கிறது. காட்டுக்குள் சுமார் மூன்று மைலுக்கப்பால் செல்லக் கதிர் காமம் என்ற ஒரு விநாயகர் ஆலயம் பூனுவிலிருந்து வந்திருக்கும் அந்தணர் பூஜையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கதிர்காமத்தில் எல்லா சமயத்தவரும் கூடி வழிபடுகின்ற காட்சி அற்புதமாக இருக்கிறது. அங்கே தங்குவதற்கு ஒரு செட்டியார் விடுதியும், இராமகிருஷ்ண மடத்திலிருந்து கட்டப் பெற்றிருக்கிற ஒரு மடமும் வசதியாக இருக்கின்றன. செட்டியார் விடுதியில் இன்னும் கொஞ்சம் பழுது பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இராமகிருஷ்ண மடம் புதிதாகக் கட்டப் பெற்றதால் நல்ல நிலைமையில் இருக்கிறது. மடத்தில் ஏராளமான மக்களுக்கு இலவச உணவு அளித்து உதவி செய்கிருர்கள். மறுநாட் காலையில் மூன்று மணிக்கே மாணிக்கக் கங்கையில் ஸ்நானம் செய்து நாலு மணிக்கெல்லாம் அதிகாலைப் பூஜைகளில் கலந்து கொண்டோம். இங்கு ஆலயத்தின் அருகேயுள்ள மலையில் தூய வெண்ணீறு கிடைக்கிறது. அதைச் சட்டிகளிலே எடுத்து கற்பூரத்தை வைத்து ஆராதனை செய்து மக்கள் பிரசாதமாக எடுத்துச் செல்கிருர்கள். இந்த விபூதி மண் மிகவும் பரிசுத்தமாகவும், தூய வெண்மை நிறத்துடனும், மிகவும் மிருதுவாகவும் இருக்கிறது.

அதை நீரிலிட்டு அணிந்து கொண்டாலே மிகவும் ரம்மியமாக இருக்கிறது.

ஆடிவேல் உற்சவத்தின் பூர்த்தி நாளில் தீர்த்தவாரி மாணிக்க கங்கையில் நடைபெறுகிறதாம். அப்போது சென்ற ஆண்டில் எடுத்து வைத்த நீரைக் கங்கையிலே கலந்துவிட்டு ஒரு வாளினுல் கங்கையில் வெட்டி மேலே கிளம்பும் நீரைப் புதுப் பாத்திரத்தில் ஏந்தி மூலஸ்தானத்தில் கொண்டு போய் வைப்பது வழக்கமாம்.

19-7-59 காலை கதிர்காம வேலனிடம் விடைபெற்று, சுமார் 700 அடி உயரத்திலிருந்து விழும் டயாலூமா என்ற நீர் வீழ்ச்சியைப் பார்வையிட்டு, நுயுரேலியா என்ற மலை வாசஸ்தலத்துக்குச் சென்ருேம். அது நம் நாட்டில் நீலகிரி, கொடைக்கானல் கோடை கால சுகவாசஸ்தலங்கள்போன்றது. இயற்கைக் காட்சிகள் எழில்பெற அமைந்துள்ளன. பூங்காக்கள், நவீன கட்டிடங்கள், நீர்வீழ்ச்சிகள் முதலியவைகளைக் காணலாம். அன்று மாலை இலங்கையில் நடுநாயகமாக விளங்கும் கண்டி என்ற நகரைப் பார்வையிட்டோம். இவ்வூருக்கு அண்மையிலுள்ள பரதேனியா என்ற தாவரப்பூங்கா உலகத்திலுள்ள பிரசித்த பெற்ற பூங்காக்களுள் ஒன்று எனக் கருதப்படுகிறது. இங்குள்ள ஒவ்வொரு செடியிலும் மரத்திலும் அதனுடைய வளர்ச்சி நன்ருகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பூங்காவின் ஓரமாகச் செல்லும் ஆற்றின்மேல் ஒரு நீண்ட தொங்குபாலம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. கண்டி நகரில் ஸ்ரீலங்கையின் புதிய பல்கலைக்கழகம், இயற்கை வனப்பு மிக்க மலைப்பிரதேசத்தில் பல அழகிய கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. கண்டியில் ஒரு விநாயகர்கோயிலும் முருகன் கோயிலும் இருக்கின்றன. முருகன்கோயில் அருகே மீன் சந்தையிலிருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது. இங்கும் முருகன் உருவமுள்ள திரைக்குப் பூஜை நடக்கின்றது.

கண்டியில் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடம் புத்தர் பெருமானின் பல்கோயில். இது இப்போது புனருத்தாரணம் செய்யப்பெற்று மிகவும் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. அருகேயுள்ள தெப்பக்குளம் அழகாக அமைந்திருக்கிறது. இங்கு நித்திய பூஜையிலும், திருவிழாக்களிலும் யானைகள் பங்கு கொள்கின்றன. சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் சுமார் 500 யானைகள் பவனி வந்ததாகவும், அதில் இராஜா என்ற பெரிய யானை நெருப்புத் துண்டை மிதித்து அசாதாரணமான வெறிகொண்டதாகவும், பல மக்கள் உயிர் துறக்கவும் படுகாயப்படவும் நேரிட்டதாகச் செய்தித் தாள்கள் மூலம் அறிகிருேம். இது மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி. அதன் பிறகு கூட அனுவசியமாகக் கூக்குரல் எழுப்பி மக்கள் அவதியுற்றதாகத் தெரிகிறது. ஸ்ரீ இலங்கையில் யானைகளும் தென்னை மரங்களும் எல்லாப் பிரதேசங்களிலும் காட்சியளிக்கின்றன.

19-7-59 இரவு கொழும்பு திரும்பினேம். வரும்வழியில் அநேக இடங்களில் புத்தவிகார்களில் தீபாலங்காரம் செய்யப்பெற்றிருந்தது. எனவே ஆடி மாதம் இலங்கையிலுள்ள எல்லா மதத்தினரும் கோலாகலமாக விழாக் கொண்டாடுகிருர்கள்.

20-7-59 காலை கொழும்பிலிருந்து கடலோரமாக நீர்கொழும்புக் கப்பால் (Negombe) வடக்கே 50 மைல் தூரத்திலுள்ள முன்னேசுவரம் என்ற புராதன சிவஸ்தலத்தைத் தரிசித்தோம். ஸ்ரீஇராமபிரான் இராவணவதத்தினுல் ஏற்பட்ட பிர்மஹத்திதோஷத்தை நிவர்த்தி செய்வதற்காக சிவலாயம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது முன்னேசுவரம் என்ற இடத்தில் பிர்மஹத்தி விலகியிருந்ததாகவும் அந்த இடத்திலேயே பிராயச்சித்த கர்மங்கள் செய்ய நினைத்தபோது சிவபெருமான் அந்த இடத்தில் தற்காலிகமாக நிவர்த்தி கிடைக்குமேயல்லாமல் நிரந்தரமான நிவர்த்தி கிடைப்பதற்கு இராமேசுவரத்தில் இலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபடவேண்டும் என்று இறைவன் அருளியதாகவும் புராண வரலாறு கூறுகிறது. இந்த ஆலயம் ஒரு ரம்மிய

மான சூழ்நிலையில் ஒரு திருக்குளத்தின் அருகே அமைந்திருக்கிறது.

21-7-59 கொழும்பிலுள்ள பொருட்காட்சிசாலை, மிருககாட்சிசாலை நகர்மன்ற கட்டிடங்கள், அரசாங்க அலுவலகங்கள் முதலியவற்றைப் பார்வை யிட்டோம். மிருகக்காட்சிசாலையில் மாலை 5-மணிக்கு யானைகளைக்கொண்டு விளையாட்டுக்கள் (Circus) செய்து காட்டுகிறார்கள். கொழும்பில் பல புத்த விகார்கள் இருந்தாலும் மிகவும் முக்கியமானவை இரண்டு. இவைகள் அளவில் பெரியவைகளாகவும், புத்தர் பெருமானின் சயனக்கோலம் பிரமாண்டமாகவுள்ளவைகளாகவும் அமைந்திருக்கிறது. கோஷ்டத்தில் அரசமரத்தருகில் ஒரு விநாயகர் உருவம் அமைக்கப்பெற்றிருக்கிறது. நம் நாட்டில் அரச மரத்துக்கும் விநாயகருக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பது யாவரும் அறிந்ததே.

22-7-59 காலை திருக்கோணமலைக்குச் செல்லும் வழியில் டம்போலா குகைகள் என்ற இடத்திற்குச் சென்றோம். இது மலைமேல் அமைக்கப்பட்ட புத்த மத மலைக்குகைகள். இங்கும் புத்தர் பெருமான் சயனக்கோலத்தில் காட்சி யளிக்கிறார். ஒன்றிரண்டு குகைகளில் நாராயணன் முதலிய உருவங்களும் இருக்கின்றன. இங்கு ஒரு சிங்கள பிக்ஷு பூஜை செய்கிறார். அதன்பின் சிகிரியா என்ற இடத்திலுள்ள மலைக்கோட்டையைப் பார்வையிட்டோம். மலைக்குகைகளில் சித்தன்னவாசல் முதலிய இடங்களிலுள்ள சித்திரங்கள் போன்ற வண்ணப் படங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. மலையடிவாரத்திலும், மலைச்சரிவிலும், மலையுச்சியிலும் புராதன செங்கற் கட்டிடங்களின் அமைப்பு நன்றாகத் தெரிகிறது. அடுத்து பொலனுறுவை என்ற புராதன தலைநகரிலுள்ள கட்டிடங்களைப் பார்வையிட்டோம். பழைய அரண்மனை, ஆஸ்தான மண்டபம், புத்தவிகார்கள், சிவாலயங்கள் முதலியவற்றைக் கண்டோம். ஒரு சிவாலயத்தின் அருகேயுள்ள கிணற்றில் நல்ல தண்ணீர் இருக்கிறது. இங்கு நின்ற கோலத்தில் அமைந்த ஒரு உருவத்தை பழங்கால அரசன் என்றும், அகத்தியர் என்றும், வேறுபடச் சொல்கிறார்கள். இந்த இடத்திலுள்ள ஒரு பெரும் ஏரியில் நீர்ப்பாசனத்திட்டம் வகுத்து நடத்துகின்றார்கள். அன்றிரவு திருக்கோணமலை சென்றோம். மறுநாட்காலை 23-7-59 மலைமேல் சென்று புதிதாக நிர்மாணிக்கப் பெற்றுள்ள கோணேசர் ஆலயத்தைத் தரிசித்தோம். திருப்பணி வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்த கோயிலின் அருகே மலையில் ஒருபாறையில் நடுவே வாளால் வெட்டியது போன்ற பிளவு காணப்படுகிறது. அந்த பிளவு வழியே கடலின் நீர்மட்டத்தைக் காணலாம். இது இராவணனால் வெட்டப்பெற்றதாகச் சொல்கிறார்கள். இந்த மலை உச்சியிலிருந்து பார்த்தால் திருக்கோணமலையின் இயற்கை வனப்பு மிகுந்த துறைமுகத்தைக் காணலாம். மூன்று பக்கமும் அடர்ந்த வனப்பிரதேசமும் கடலிலிருந்து கப்பல்கள் உள்ளே வர வளைந்த வாயிலும் அமைந்திருப்பது வேறெங்கும் காணமுடியாத காட்சியாகும். சென்ற மகா யுத்தத்தில் இந்த துறைமுகத்தை மிகவும் சீர்திருத்த வேண்டுமென்று திட்டங்கள் வகுக்கப் பெற்றதாயும், யுத்தம் நின்றுவிட்டதால் மேற்கொண்டும் வேலைகள் நடைபெறவில்லை யென்றும் சொல்கிறார்கள். திருக்கோணமலை ஊரில் கடற்கரை அருகில் ஒரு பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயில் இருக்கிறது. திருக்கோணமலையிலிருந்து சுமார் 5 மைல் தூரத்தில் இந்த மாரியம்மன்கோயிலைச் சேர்ந்த ஏழு வெந்நீர்க் கிணறுகள் 'கன்னியாயி' என்ற இடத்தில் இருக்கின்றன. சுமார் இருபதடி அகலம் முப்பதடி நீளமுள்ள இடத்தில் 5 தனிக் கிணறுகளும் ஒரு இரட்டைக் கிணறும் இருக்கின்றன. இவை உண்மையிலேயே சிறு தொட்டிகள்போல் காரையினால் கட்டப்பெற்றிருக்கின்றன. பூமி மட்டத்திலிருந்து சுமார் ஒரு அடி தூரத்தில் சுமார் இரண்டடி ஆழத்தில் வெந்நீர் இருக்கிறது. ஒவ்வொரு தொட்டியிலும் இருக்கிற நீர் ஒவ்வொரு உஷ்ண நிலையில் இருக்கிறது. சுமார் 20 டிகிரியிலிருந்து 50 டிகிரி வரை உஷ்ணம் உள்ள வெந்நீர் இருக்

கிறது. பக்கத்தில் 50 கஜ தூரத்தில் உள்ள கிணற்றில் 15 அடிக்குக் கீழே குளிர்ந்த தண்ணீர் இருக்கிறது. இதை ஸ்ரீலங்கை செல்லும் ஒவ்வொருவரும் கண்டு அனுபவிக்க வேண்டியது அவசியம்.

திருக்கோணமலையில் உள்ள சிவாலயத்தில் ஆதி சைவ வேளாளரும், ஆதி சைவ சிவாசாரியார்களும் முறைப்படி பூஜை செய்வதாகத் தெரிகிறது. நாங்கள் சென்றபோது சிவாச்சாரியார் முறை இல்லாததால் அவரைக் காண முடியவில்லை. பூஜை செய்யும் சைவ வேளாளருக்கும் சிவாச்சாரியருக்கும் சிவாகமப் பயிற்சி கொடுப்பது நலம். 23-7-59 காலை பூஜை பார்த்துவிட்டு அனுராதபுரம் சென்றோம். திருக்கோணமலையில் தங்குவதற்கு மலையின் மேல் செய்யப்பட்டிருக்கும் வசதிகள் இன்னும் நல்ல முறையில் அமையவேண்டும். திருப்பணிக் குழுவினர் இதிலும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம். அனுராதபுரம் செல்லும் வழியில் மிகிந்தலை என்ற இடத்தில் மலைக்குகைகள் இருக்கின்றன. இதன் உச்சி சுமார் தரைமட்டத்திலிருந்து 1800 படிகள் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த மலைக்கருகில் பல சுனைகள் இருக்கின்றன. மலையின்மேல் ஒரு புத்த விகாரும் இரண்டு மூன்று புத்த ஆலயங்களும் உச்சியில் அசோக மன்னன் மகன் மகிந்தன் என்ற இளவரசன் துறவறம் பூண்டு புத்த உபதேசங்களைப் பறைசாற்றிய இடம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. சிங்கள அரசன் ஒரு மானை விரட்டிக் கொண்டு வந்தபோது அவனை நிறுத்தி மானுக்கு அபயம் கொடுத்து புத்த பெருமான் உபதேசத்தை நிலைநாட்டிய இடம் என்று இது பாராட்டப் பெறுகிறது. இந்த நிகழ்ச்சியைக் காட்டும் உருவங்களும் ஒரு குகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

அ. உத்தண்டராமன்

## சந்தாதாரர்களுக்கு

1958 அக்டோபர் முதல் 'திருக்கோயில்' இதழ்பெற்று வரும் சந்தாதார்களெல்லோரும் 1959 செப்டம்பர் முடிவுக்குள் அடுத்த ஆண்டிற்குரிய கையொப்பத்தொகை ரூபாய் பத்தும் சென்னை அறநிலைய ஆணையர் அலுவலகத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண்ணையும், சரியான முகவரியும் குறித்தனுப்புமாறு வேண்டப்படுகிறது.

— இதழாசிரியர்.

# ☀ விநாயக சதுர்த்தி ☀

பிடியதனுரு வுமை கொள மிகுகரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

— திருஞானசம்பந்தர்

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின் றேனே

— திருமூலர்

நீடாழி உலகத்து மறை நாலோடு
ஐந்து என்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன்
மாபாரத தம்சொன் னநாள்
ஏடாக வடமேரு வெற்பு ஆக
வம்கூர் எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப்
பணிந்துஅன்பு கூர்வாம் அரோ

— வில்லிபுத்தூரார்

விகாரி ஆண்டு ஆவணி 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (6-9-59) விநாயகசதுர்த்தி வருகிறது. அன்று நாடு முழுமையும் விழாக் கொண்டாடப்படும். விநாயக வழிபாடு நம் பரத கண்டத்தில் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. தேவார மூவர் காலத்துக்குப்பின் அது சிறப்பாக நடந்து வருகிறது. மஞ்சள், மண், சாணம் இவைகளைப் பிடித்துப் பிள்ளையார் ஆக்கி எளிய முறையில் வணங்குவது, எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழி (உ) போட்டுத் தொடங்குவது, நூல்களில் முதலில் காப்புச் செய்யுட்கள் பாடுவது, கோயில்களில் விநாயகருக்கு பூசனை வழிபாடு நடத்துவது, சைவரேயன்றி வைணவரும் பௌத்தரும் இவரை, வணங்குவது இவை போன்றவை விநாயக வழிபாட்டின் பழமையையும் பெருமையையும் காட்டும்.

**பொதுவாக,** விநாயகரை நாள்தோறும், வெள்ளிக்கிழமைகளிலும் வழிபடலாம். சிறப்பாக, மாதத்தில் வரும் இரு சதுர்த்திகளிலும், ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியிலும், மாசி மாத தேய்பிறையில் செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தியிலும் வழிபடலாம். நம்முடைய நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப் படுவது ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தி தான். பிரமனிடம் தோன்றிய சிந்துரன் என்னும் அசுரனைக்கொல்ல உமாதேவியார் வயிற்றில் கஜானனர் அவதரித்த காலம் அந்த நாளில் என்பர். அத்தகைய சதுர்த்தி நாளைப்பற்றி விநாயக புராணத்தில்,

"பந்தமறும் **ஆவணித் திங்களின் வளரும் சதுர்த்தி"** என்றும், பின்னுமோர் இடத்தில் பிள்ளையார் கூற்றாகவே,

**"சிங்கமாமதி யிடைச்சேர்முன் பக்கத்துத்
தங்கும் நம் சதுர்த்தி."**

எனவும் கச்சியப்ப முனிவர் கூறி யிருக்கிறார். ஆவணித் திங்கள் என்பதும், சிங்கமாமதி என்பதும் சௌரமான (சூரியனை வைத்து எண்ணப்படும்) மாதப் பெயர்கள். ஆதலின் வளர்பிறையில் வரும் சதுர்த்தியை விநாயக சதுர்த்தியாக விரதம் நோற்று, விழாக் கொண்டாடுவதுதான் முறை.

மஞ்சள், சாணம், மண் இவைகளின் ஒன்றால் பிள்ளையார் பிடித்து வைத்து, பச்சிலை அறுகம்புல் தூவி, அவல், பொரி, சுண்டல், மோதகம், இளநீர், பச்சரிசி, பிட்டு, வெள்ளரி, தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம் இவைகளைப் படைத்து வணங்கலாம். இவை எளிய முறையில் செய்யலாம். இன்னும் களிமண்ணினால் செய்யப் பெற்ற பிள்ளையார் உருவத்தை வாங்கி, எண்ணெய், தேன், பால், தயிர், இளநீர், எலுமிச்சை சாறு, மாப்பொடி, மஞ்சட்பொடி, திரவியப் பொடி, பஞ்சாமிர்தம், சந்தனம் இவைகளால் அபிஷேகம் செய்து, பூக்களால் அலங்கரித்து, மேற்சொன்ன பொருள்களைப் படைத்து தூபதீபாராதனைகள்செய்தும் வழிபடலாம். விநாயக சதுர்த்தி யன்று அவசியம் ஆலயத்திற்குச் சென்று கணபதியை வணங்க வேண்டும். அவர் திருமுன்னர், நெற்றியில் குட்டிக் கொண்டு, கன்னங்களில் இருகைகளால்

அடித்துக்கொண்டபின், காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடவேண்டும். குட்டிக்கொள்வது அவரை நினைவு மூட்டிக் கொள்ள. கன்னத்தில் போட்டுக் கொள்வது மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்கு. இதனாலேயே 'குட்டிக்கரணம்' என்ற வழக்காறு தமிழ் நாட்டில் உண்டாயிற்று.

விநாயகர், பார்வதி பரமசிவனுடைய மானசிக புத்திரர். கஜமுகாசுரனைக் கொல்வதற்காகத் தேவர்கள் வேண்ட இறைவன் திருவருளால் திருவவதாரம் செய்தார். அவருக்கு அம்புலி மவுலியன், ஆனைமுகன், ஐங்கரன், ஒற்றைக் கொம்பன், கணபதி, விக்கினேசுவரன் முதலிய பல திருநாமங்கள் உண்டு. விநாயகர் என்றால் தனக்குமேல் நாயகர் அல்லது தலைவர் இல்லாதவர் என்றும், உயர்வு மிக்க **விநாயகர்** என்றும் பொருள். கணங்களின் தலைவரானபடியால் **கணபதி**. தம்மைப்பணிந்தவர்களுக்கு இடையூறுகளை நீக்கியும், அல்லாதவர்க்கு ஆக்கியும் அருள் புரிவதால் விக்கினேசுவரன், விக்கினராஜன், விக்கின விநாயகன் என்ற திருப்பெயர்கள் ஏற்பட்டன. விநாயகர் பனிரெண்டு திருவவதாரங்கள் எடுத்ததாகப் புராணங்கள் கூறும். விநாயகர், மூர்த்தி ஒன்றேயாயினும் மூர்த்தி பேதங்கள் பல. அவைகளில் முக்கியமானவை பதினாறு என்பர். இந்த கணபதி மூர்த்தங்கள் உருவத்தாலும், தரித்துள்ள ஆயுதங்களாலும் மாறுபாடு உடையவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால், பொதுவாக விநாயகர் உருவத்தில் ஆனைமுகம், தேவ உடல், பூத அடிகள், அங்குசபாசம், மோதகம் ஒடிந்த கொம்பு இவைகளை ஏந்திய திருக்கரங்கள், அமுதகலசம் உள்ள துதிக்கை எல்லாம் சேர்ந்து பிரணவ (ஓங்கார) வடிவமாக அமைந்திருக்கக் காண்கிறோம். விநாயக உருவ உண்மையைப்பற்றிய விவரங்கள் முன்னொரு இதழில் விளக்கப்பட்டிருக்கின்றன.

முன்னொரு காலத்தில் நாரதர் தாம் அரிதிற்பெற்ற மாங்கனியொன்றைச் சிவபெருமான் திருமுன்னர் வைத்தார். இரு மருங்கிலும் அமர்ந்துள்ள விநாயகர், முருகர் இவர்களில் எவருக்கு அதைக் கொடுக்கலாம் என்று பிரமனைப் பார்த்துச் சிவபெருமான் கேட்டார். இளையவரான முருகருக்கு அளிப்பது முறையென்றார் நான்முகன். கணேசருக்குக் கோபம் பொங்கியெழ, மலரவன் மன்னிப்பு வேண்ட கணபதியும் கருணை செய்தார். அதைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் புன்னகை புரிந்தான். அதைக்கண்ட ஐங்கரன் சினங்கொண்டு "ஆன்றோர் அவையில் அடக்கமின்றிப் புன்னகை புரிந்ததால் நீ உலகத்தில் ஒளி செய்வது ஒழிந்து மறைந்து போகக் கடவாயாக" என்று சாபமிட்டார். தேவர்களும் இந்திரனும் சந்திரனுக்குச் சாப விமோசனம் செய்தருளுமாறு விநாயகரை வேண்டினர். ஆவணி வளர்பிறைச் சதுர்த்தியன்று மாத்திரம் சந்திரனையாவரும் பார்க்காதிருக்கக்கடவார்கள் என்றும், மற்றைய நாட்களில் முன்போலவே பார்க்கலாம் என்றும் ஆனைமுகன் அருள் செய்தார். இதையறிந்த சந்திரன், தவம்கிடந்து பிள்ளையாரைப்பிழை பொறுக்க வேண்டினான். "சங்கடங்களை நீக்கிக்கொள்ள விரும்பினவர்கள் அங்காரக சதுர்த்தி தோறும் நீ உதயமாகும் சமயத்தில் நம்மைப் பூசித்து, உன்னையும் அருச்சிக்கக் கடவார்களாக" என்று சந்திரனுக்குத் திருவருள் புரிந்தார். இதனாலேயே நம் நாட்டில் நாலாம் பிறைச் சந்திரனைப் பார்க்கக்கூடாது என்ற வழக்கம் இருந்துவருகிறது.

நாம் எல்லோரும் வருகிற விநாயக சதுர்த்தியன்று விதிப்படி விரதம் அனுட்டித்து, வழிபாடு செய்து, அப்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

**வாக்கு உண்டாம் நல்லமனம் உண்டாம்**
**மாமலராள்**
**நோக்கு உண்டாம் மேனி நுடங்காது—**
**பூக்கொண்டு**
**துப்புஆர் திருமேனித் தும்பிக்கை**
**யான்பாதம்**
**தப்பாமல் சார்வார்**
**தமக்கு**

—அவ்வையார்.



மதுரை கள்ளழகர் கோயில்—விஷ்ணு வராக அவதாரம்—இலட்சுமி.

# 'பன்றியாம் தேசுடைய தேவர்'

## (வராக அவதாரம்)

பி. ஸ்ரீ.

பிறப்பும் இறப்பும் இல்லாத பெருமான் உயிர்க்குலத்தைக் காப்பாற்றவும் தீமையை ஒழிக்கவும் பல பிறவிகள் எடுக்கிறான். இந்தப் பிறவிகளே அவதாரங்கள். பிறப்பிலி பிறந்தவாறு இது! வளர்ந்தவாறு இது! என்று அதிசயமாய்க் கதைகளை எழுதி வைத்திருக்கிறார்கள், 'எல்லாம் எம்பெருமான் திருவிளையாடல்' என்று பக்தர்கள் அனுபவிக்கிறார்கள். கவிஞர்கள் கவிதை புனைந்து கொண்டாடுகிறார்கள். ரஸிகர்கள் ரஸானுபவம் செய்கிறார்கள். தத்துவப் பேரறிஞர்கள் புதைபொருள் காட்டுகிறார்கள். அனுபூதிச் செல்வர்கள் ஊடுருவிப் பார்த்து உண்மை காண்கிறார்கள்.

தெய்வம் நம்மைப்போல் கரும வசமாகிப் பிறப்பதில்லை; கருணையே உருவாகி அந்த அந்தக் காலங்களில் அவதாரம் செய்கிறது. இத்தகைய அவதாரங்களுக்கு எல்லை இல்லையென்பது இதிகாசபுராணங்களின் கொள்கை. எனினும், 'தசாவதாரம்' என்று பத்து அவதாரங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது பிரசித்தம்.

## ஆமைக்கு முன் அன்னம்

இந்தப் பத்து அவதாரங்களில், மச்சாவதாரத்திற்குப் பின் 'ஆமை அவதாரம்' என்ற கூர்மாவதாரத்தைத் தான் பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். எனினும், ஆழ்வார்கள் அன்னமாகத் திருமால் அவதரித்தான் என்பதையும் வற்புறுத்துவதைத் திவ்யப் பிரபந்தங்களில் காண்கிறோம். இந்த அவதாரத்தைப் பெரியாழ்வார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**துன்னிய பேரிருள் சூழ்ந்(து) உலகைமூட**
**மன்னிய நான்மறை முற்றும் மறைந்திடப்**
**பின்இவ் உலகினில் பேரிருள் நீங்க,அன்று**
**அன்னமது ஆனானே! அச்சோ, அச்சோ!**
**அருமறை தந்தானே! அச்சோ, அச்சோ!**

மண்ணும் விண்ணும் அறியாமைப் பேரிருள் மூடிய காலத்தில் அன்னமாகி அருமறைகள் அருளிச்செய்தான் திருமால் என்ற அவதாரக் கதையைத் திருமங்கை மன்னனும் குறிப்பிடுகிறார். மேலும் இவர் அன்னம் என்ற ஹம்ஸாவதாரத்தை வராகாவதாரத்துடனும் மச்சாவதாரத்துடனும் சேர்த்துப் பேசுவதையும் காண்கிறோம்:

**அன்னமும் கேழலும் மீனும்ஆய**
**ஆதியை**

[கேழல் - பன்றி.]

## வராகாவதாரம் முக்கியமானது

திருமங்கையாழ்வார் தம் திருவரங்கத் திருப்பதிகத்திலே,

**ஏனம் மீன் ஆமையோடு**
**அரியும்சிறு குறளுமாய்**

[ஏனம்-வராகம். அரி-நரசிங்கம். சிறு குறள்-வாமனன்.]

என்று ஸ்ரீரங்கநாதனுடைய உலகத்தலைமை பேசும் பாசுரத்திலே வராகத்தை முதன்மையாகக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

முதலாழ்வார் மூவருள்ளும் முதல்வரான பொய்கையாழ்வார், வராகாவதாரத்தின் பெருமையைக் குறிப்பிடும்போது, வாமனாவதாரத்திலே 'திரிவிக்கிரமன்' என்ற பெரிய வடிவத்தோடு திருமால் அளந்த பூமியானது வராகாவதார மூர்த்தியின் ஒரு கோரப்பல்லின் ஒரு சிறு பகுதியில் அடங்கிக் கிடந்ததென்று வருணிக்கிறார். குள்ளன் மிகப் பெரிய உருவமாக ஓங்கி வளர்ந்து உலகை அளந்தபோது, திருவடியும் அந்த உருவத்திற்குத் தக்கபடி விரிந்து வளர்ந்திருக்க வேண்டுமல்லவா? அந்தத் திருவடிக்குச் சரி சமமாகக் கிடந்த பூமி வராகப் பெருமானின் கோரப்பல்லிலே கோரைக் கிழங்கு போல் கிடந்த தென்றால், வராகாவதாரத்தின் ஆச்சரியமான பெருமையை ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

வராக அவதாரத்தின் பெருமையைக் கொண்டே எம்பெருமானின் பெருமையைப் பக்தர்கள் உணர்ந்து கொள்ளலாம் என்பதும் பொய்கையாழ்வார் கருத்து:

**பிரான்!உன் பெருமை பிறர்ஆர் அறிவார்?**
**உராய் உல(கு)அளந்த நான்று—வராகத்(து)**
**எயிற்றளவு போதாவா(று) என்கொலோ எந்தை**
**அடிக்(கு)அளவு போந்த படி?**

[பிரான்-பிரானே. உராய்-உலாவி. நான்று-நாளில். எயிற்றளவு-கோரப்பல்லின் ஏகதேசமான அளவும். போதாவாறு - போதாததாக இருந்த விதம். என்கொலோ-என்னவோ. அடிக்கு அளவு போந்த-திருவடிக்கு அளக்கும் படியிருந்த. படி-பூமி.]

வராகப் பெருமானை 'நிலத்தைக் குத்தியெடுத்துக் கொண்டு திரிந்த கோரப்பல்லையுடைய ஒப்பற்ற பன்றி' என்று பொருள்பட வருணிக்கிறார் பொய்கையாழ்வார். திருமழிசையாழ்வார் பாதாளத்திலே பூமிதேவி நம்மை எடுக்க வல்லவர் யாரும் இல்லையே' என்று ஏங்கிக் கிடந்த காலத்தில் அந்தப் பூமியை அங்கேயிருந்து விடுவித்துக் கொண்டு வந்த மகாவராக மூர்த்தி என்று பொருள்பட வருணிக்கிறார்.

ஞானமாகி ஞாயிறாகி (சூரியனாகி) உலகத்தைக் காப்பாற்றினான் என்றும் சொல்லுகிறார் திருமழிசையார். மகாவராகமூர்த்

தியை ஞானப்பிரான் என்று பிரசித்தமாகக் கூறுவதுண்டு,

### வராகாவதாரத்தின் கதை

முன்னொரு காலத்தில் இரணியன் இரணியாட்சன் என்ற இரண்டு அசுர சகோதரர்கள் உலகத்தைப் பல கொடுமைகளுக்கும் உட்படுத்தினார்கள். இவர்களில் தம்பியான இரணியாட்சன் நல்லவர்களையும் தேவர்களையும் ஹிம்ஸிப்பதையே கடமையாகவும் பொழுது போக்காகவும் கொண்டு அண்ணனுக்கும் அத்துறையில் பாடம் கற்பித்துக் கொடுக்கும் நிலையில் இருந்தான்.

இவர்கள் காசியப முனிவருக்குத் திதி என்ற மனைவியின் புதல்வர்களாகப் பிறந்தவர்கள். அசுரர்களாகிக் கொடுஞ் செயல்கள் புரிந்து அறநெறியையே அடியோடு அழித்து விடவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்கு ஏற்ற தவவலிமையையும் பெற்றுக் கொண்டு வேறு வசதிகளையும் பெருக்கிக் கொண்டார்கள்.

காசியப மாமுனிக்குப் புதல்வராகப் பிறப்பதற்கு முன் திருமாலின் வைகுண்ட லோகத்திலே இவர்கள் வாசல் காக்கும் பணியாளர்களாக இருந்தார்கள் என்று புராணம் சொல்லுகிறது. அப்பொழுது இவர்களுக்கு ஜயன் என்றும் விஜயன் என்றும் பெயர்கள். பரம சாதுக்களான சநகாதி முனிவர்கள் திருமாலைத் தரிசிக்க வந்ததும் துவாரபாலகர்கள் இருவரும் அந்தப் பெரியோர்களை இகழ்ந்து தடுத்து நிறுத்திவிட்டார்கள். உடனே முனிவர்கள் சாபம் கொடுத்தார்கள்.

'காவலாளர்களே! உங்கள் கடமையை நீங்கள் செய்ய முயன்றதில் தவறொன்றும் இல்லை. ஆனால் கோபத்துடனும் கெட்ட எண்ணத்துடனும் துஷ்ட வெறியுடனும் எங்களைப் பேரவமானத்திற்கு உட்படுத்தி விட்டீர்கள். உங்கள் செருக்குற்ற சிந்தையும் செயலும் அசுர மயமாகி விட்டன. தெய்வப் பண்பு உள்ளவர்களே இங்கே தொழில்புரிய வேண்டும். நீங்கள் இப்போது வெளியிட்ட உங்கள் சுபாவத்திற்கு இசைந்தபடியே அசுரர்களாவீர்கள்!' என்று முனித்தலைவர்கள் சாபம் கொடுத்தனர்.

நிகழ்ந்தவற்றைத் தெரிந்துகொண்ட திருமாலிடம் துவாரபாலகர்கள் தங்கள் பச்சாத்தாபத்தை அறிவித்துக் கொண்டார்கள். 'நாம் அவதாரம் செய்து அசுரவதம் என்ற வியாஜத்தால் மறக்கருணை புரிந்து உங்களை ஆட்கொள்வோம்!' என்றான் கருணைக் கடல். அந்த ஜயனும் விஜயனுமே இரணியன், இரணியாட்சன் என்ற அசுர சகோதரர்களாகப் பிறந்திருந்தார்கள்.

அசுர வாழ்க்கையை மும்முரமாக வாழத் தொடங்கியவர்களுக்கு அதர்மவெறி நாளுக்கு நாள் அதிகரித்தது. மண் நடுங்க விண் நடுங்க எண்ணிறந்த தீமைகளைப் புரிந்தவண்ணமாயிருந்தனர், இருவரும் படுகுழியை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தனர். தம்பி இரணியாட்சன் அந்த வழியில் அண்ணனைக் காட்டிலும் அதிவேகமாய்ச் செல்லத் தொடங்கினான், எனவே, அண்ணனுக்கும் முன்பே படுகுழியில் விழுந்து விட்டான்!

ஏழை மக்களும் சாதுக்களும் ஆற்றாது அழுத கண்ணீரைக் கண்டு திருமால் தக்க தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். தீமை விரிந்து பரந்து தன்னையே அழித்துக் கொள்ளும் நிலைமை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் கண்டு கொண்டான். அப்போது 'இந்தப் பூவுலகத்தை ஒரேயடியாக ஒழித்துவிட்டால் என்ன? என் அபார வலிமையை அப்போது எத்தேவரும் ஒப்புக்கொள்வார்கள்; முத்தேவரும் என் அடிகளில் முடிபடவந்து விழுவார்கள்!' என்று கனாக்கண்டான் இரணியாட்சன்.

இப்படி எண்ணித் துணிந்த கருமத்தை அப்படியே முடிக்கவும் துணிந்தான். 'பூமியைப் படிப்படியாக ஒழித்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் அப்படியே பாய்போலச் சுருட்டிக் கடலுக்கு அடியில் ஒளித்துவைத்து விடுவோம்!' என்று எண்ணினான் ஒருகணம்; இந்த எண்ணம் அடுத்த கணமே செயலாகி விட்டது.

'என்ன அதிசயம் இது! மண்ணுலகம் திடீரென்று மறைந்துவிட்டதே! எங்கே போயிற்று? எப்படிப் போயிற்று?' என்று திகைத்தார்கள் தேவர்கள். 'மண்ணுலகத்தின் கதி விண்ணுலகத்துக்கும் வந்து விடுமோ?' என்று கவலைப்பட்டார்கள். 'திருமாலே சரணம்!' என்று போய்க் காலில் விழுந்தார்கள். உடனே கிடைத்தது 'அஞ்சேல்' என்ற அபயம். 'பொல்லாத அசுரன்

புரிந்த பொல்லாங்கு இது!' என்பது திருமாலுக்குத் தெளிவாகிவிட்டது.

திடீரென்று பன்றியின் பேருருவம் ஒன்று தோன்றியது. மறுபடியும் திசை நடுங்கியது; விண் நடுங்கியது, 'எம்பெருமானின் ஒருவகைநடுக்கச் சிகிச்சை முறை இது!' என்பதைத் தீர்க்கதரிசிகளான முனிவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

தெய்வப்பன்றி நீண்டு வளைந்த பயங்கரமான கோரப்பற்களுடன் புறப்பட்டது. கடலுக்கு அடியிலே கிடந்த பூமியைத் தன் கோரப் பல்லினால் பெயர்த்தெடுத்து வந்து மறுபடியும் நிலைநாட்ட முயன்றது. இரணியாட்சன் தன் பொன்னிறக் கண்களால் அந்த முயற்சியைக் கண்டுபிடித்துச் சினந்து சீறிக்கொண்டு பன்றியுடன் போர்புரியத் தொடங்கினான். ஆம்; இரணியன் பொன்னிறமேனியன்; இரணியாட்சனோ பொன்னிறக் கண்களை யுடையவன்.

பன்றியும் விளையாட்டாக அந்தப் போரைச் சற்று நீடிக்கச் செய்தது. அசுரனோ மேலும் ஆவேசம் கொண்டு மூர்க்கமாகத் தாக்கினான். கடைசியாகத் தெய்வப்பன்றி அவனைக் கோரப்பல்லால் குத்திக் கொன்று விட்டது. இப்படி இரண்யாட்சவதம் முடிந்ததும் பூமிதேவி வராகமூர்த்தியைப் பெரு மகிழ்ச்சியுடன் தொழுதாள்.

சீதேவி பூதேவி என்ற தேவியருக்குக் கணவன் திருமால் என்று புராணம் கூறுகிறதல்லவா? 'உம்மோடு ஒட்டியவளாய் உம்மையே நம்பியிருக்கும் அடியவள் உமக்கே அடைக்கலம்!' என்றாள் பூமிப்பிராட்டி. வராகப்பெருமான் துஷ்ட அசுரனைக் குத்திக் கொன்ற அதே பல்லின் நுனியால் பெரும் பரிவுடன் பூமிதேவியை ஏந்திக்கொண்டு மேலே வந்தான்; மூச்சுக் காற்றால் பூமியைப் புனிதமாக்கி வழக்கம்போல் இயங்கச் செய்தான்.

முனிவர்கள் ஆனந்தக் கூத்தாடினர். தேவர்கள் பூமழை பொழிந்து பூவராகப் பெருமானை வாழ்த்தினர். மச்சமாய் அன்னமாய் ஆமையாய்ப் பன்றியாய் உலகத்திற்குப் பணிசெய்த பெருமானும் திருப்தியடைந்தான். கருணைக் கடவுளால் கொல்லப் பெற்ற அசுரனது ஆவியும் திருப்தியுடன் அடுத்த பிறவியை எதிர்நோக்கியது. மூன்று அசுரப் பிறவிகளுக்குப் பின் மறுபடியும் விஜயன் என்ற துவாரபாலகனுகப் பதவி ஏற்க வேண்டிய பாக்கியசாலிதானே இப்போது கொலையுண்ட இரணியாட்சன்?

வராகாவதாரம் குறித்து வேறொரு வரலாறும் உண்டு. இப்பொழுது நாம் சுவேதவராக கல்பத்தில் வாழ்கிறோம் என்பர். கல்பம் அல்லது கற்பம் என்பது நீண்ட காலத்தைக் குறிக்கும். இக்காலத்தை ஒரு பிரமனின் ஆயுள் என்றும்,432 கோடி என்றும் பௌராணிகர் கணக்கிடுவர். இதற்கு முந்திய கல்பத்தைப் பாத்ம கல்பம் என்பர். ஒவ்வொரு கல்ப காலத்தின் இறுதியிலும் எங்கும் ஒரே பிரளய வெள்ளமாகி விடும் என்றும், அந்த வெள்ளத்தில் பூமி மூழ்கிக் கிடக்குமென்றும் புராணங்கள் கூறுகின்றன. பாத்மகல்பத்தை ஒட்டிய பிரளயத்தின் இறுதியில் மூழ்கிப் போன பூமியைத் திருமால் மகாவராக வடிவம்கொண்டு கோரப்பல்லின் நுனியால் எடுத்து வந்தானும்.

இந்தக் கதையைத் திருமங்கையாழ்வார் அழகான பாசுரம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**பாரார் அளவும் முதுமுந்நீர்**
**பரந்த காலம், வளைமருப்பின்**
**ஏரார் உருவத்(து) ஏனமாய்**
**எடுத்த ஆற்றல் அம்மானை..."**

[பார்-பூமி. முதுமுந்நீர்-பிரளய சமுத்திரம். வளைமருப்பின்-வளைந்த கோரப் பல்லில். ஏரார் உருவத்து ஏனம் - அழகு நிறைந்த உருவத்தை யுடைய பன்றி. அம்மான்-கடவுள் இந்த வராக மூர்த்தியின் பேராற்றலைக் குறிப்பிடுவதுடன் நிறைந்த அழகையும் குறிப்பிடுகிறார் இந்த ஆழ்வார்.

வராகாவதாரம் குறித்து வேறொரு புராணச் செய்தியும் உண்டு. திருமால் ஆதி வராக ரூபியாய்ப் பூமியின் கீழிருந்து இதைத் தாங்கிக்கொண்டே இருக்கிறானும். வராகாவதாரம் என்று சொல்லும்போது, முக்கியமாக இரணியாட்சன் கதையும் அடுத்தபடியாகப் பிரளய வெள்ளத்தின் கதையும், கடைசியாக ஆதிவராகப் பெருமானின் நிலையும் நினைவிற்கு வருகின்றன.

**வராகமும் பக்தி-வெள்ளமும்**

பெரிய திருமந்திரத்தின் மகிமையைப் பெரிய திருமொழியின் முகப்பிலே பேசுகிருர் திருமங்கையாழ்வார். இந்த முகப்புப் பதிகத்திலேயே வராகமூர்த்தியின் ஆற்றலையும் அருளையும் ஒருங்கே வற்புறுத்துகிருர். மாமல்லபுரத்துத் தலசயனப் பெருமானை 'ஞானத்தின் ஒளி உரு' என்று குறிப்பிடும் போது இந்த ஆழ்வார் ஞானப்பிரானுகிய வராகப்பெருமானை நினைவூட்டிக் கொள்வதையும் காண்கிருேம்.

வராகப் பெருமானின், மலைபோன்ற மேனியையும் வெண்மையான கோரப்பல்லையும், எரியும் கண்களையும், 'வென்றிசேர் திண்மை' என்று பாராட்டத்தக்க பேராற்றலையும் வருணிக்கிருர் திருமங்கை மன்னன். இந்தப் பேராற்றலோடு கூடிய பேரழகையும், தர்மாவேசமாகிய பெருங்கோபத்தையும், உலகிற்குச் செய்த பெரும் பணியின் அழகையும் தம் 'பெரிய திருமொழி'யில் அங்கும் இங்கும் இவர் வருணிப்பதைக் கண்டு, இந்த ஆழ்வாரின் வராகாவதார பக்தியை வியந்து நோக்குகிருேம்.

ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வாரும் வராகப்பெருமானிடம் பெரும் பக்தி கொண்டவர் தாம். 'வேதங்களை உபகரித்துள்ள சிறப்புடனும், தேவ தேவனுகப் பிரளய காலத்திலே பள்ளிகொண்டிருக்கும் சிறப்புடனும் வராகப்பெருமானின் அவதாரப் பெருஞ்செயலை ஒப்பிட்டு இப்பெருமான் மீது தமக்குள்ள பக்திப் பெருங்காதலையும் தெரிவிக்கிருர் இந்த ஆழ்வார்.

**நின்திரு எயிற்ருல் இடத்துநீ கொண்ட**
**நிலமகள் கேள்வனே!**

[நின்திரு எயிற்ருல்—உன்னுடைய கோரப் பற்களால். கேள்வனே—நாயகனே.]

என்று அழைத்து இந்த அவதாரப் பெருஞ் செயலுக்கும் தம் உள்ளத்தைப் பறிகொடுக்கிருர் இவர்.

'அடியேன் தொழ வந்தருளே!' என்று நம்மாழ்வார் மனமுருகப் பிரார்த்திக்கும் பாசுரத்தின் தொடக்கமே,

**ஏனமாய் நிலம்கீண்ட**
**என் அப்பனே!**

என்ற விளியுடன் அமைந்திருக்கக் காண்கிருேம். வராகாவதாரத் திருவிளையாட்டைச் சிந்தித்தாலே திருமாலின் திருவடிகளில் பக்தி பெருகிவிடும் என்கிருர்.

பெரியாழ்வாரின் பாசுரங்களிலும் வராகாவதாரப் பெருமை சிறப்பாகப் பேசப்படுவதைக் காண்கிருேம்.

**பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய**
**பாடற்கடல் வண்ணு!**

என்று கண்ணன் கோலம் கண்டு அன்னை மகிழ்வதாக வரும் பாசுரம் ஒன்று தொடங்குவதைக் காண்கிருேம். நரசிங்கம்போல் அவ்வளவு வலிமை வாய்ந்தது வராகம் என்றும் இந்த ஆழ்வார் பாடியிருக்கிருர்.

பூமி தேவியின் அம்சமாகத் தோன்றியவள் ஆண்டாள் என்பர். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆண்டாளும் பூமிப் பிராட்டிக்காக இறைவன் வராக வடிவம் கொண்டதைப் பிரஸ்தாபிக்கிருள்,

**பாசிதூர்த்துக் கிடந்த**
**பார்மகட்குப் பண்டொருநாள்**
**மாசுடம்பில் நீர்வாரா**
**மானமிலாப் பன்றியாம்**
**தேசுடைய தேவர்.**

என்பது ஆண்டாளின் வாக்கு.

நீண்டகாலம் தண்ணீருக்குள் முழுகிக் கிடந்தபடியால் பாசிபடர்ந்து கிடந்தாளாம் பூமி தேவி. அந்தப் பூமிமீதுள்ள ஆசையால் அவளைக் காப்பாற்ற ஒரு வடிவத்தைக் கொண்டவன் பன்றியாக வந்தானே!— என்று நிந்தாஸ்துதியாகப் பேசுகிருள். பன்றியின் உடம்பை 'மாசுடம்பு'—அதாவது, அழுக்கேறின உடம்பு—என்கிருர். அந்த அழுக்கேறின உடம்பில் தண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்ததாம். காதலன்மீது தான் கொண்டிருக்கும் கோபத்தால் 'மானமிலாப் பன்றி' என்று கூடச் சொல்லிவிடுகிருள். எனினும் 'பன்றியாம் தேசுடைய தேவர்' என்று அந்த ஒளிமயமான அழகிலும் நெஞ்சைப் பறிகொடுத்து விடுகிருள்.

**வராக அவதார தத்துவம்**

தம் கருமமே கண்ணுயிருப்பவரைச் சாதாரணமாகப் புத்திசாலிகள் என்று மக்கள்

பாராட்டுகிறார்கள். ஆனால் தன்னலக்கருமம் என்றால் சோம்பிப் பிறர்க்கு நன்மை புரிவதிலேயே கண்ணாயிருப்பவரே மெய்யறிஞராவர். பகவானோ அடியவருடைய காரியமே கண்ணாயிருப்பவன் என்பது பக்தர்களின் கொள்கை. இதற்குப் பொதுவான சாட்சி அவதாரங்கள்; சிறப்பான சாட்சிகள் மீன், ஆமை, பன்றி ஆகிய அவதாரங்கள் என்பர்.

அன்பு நெறியில் நிற்கும் அடியவர்கள் தம் சொந்தக் காரியத்தைக் கவனிக்காமல் உலக நலமாகிய கைங்கரிய நெறியிலேயே சென்றுகொண்டிருக்க இவர்கள் காரியத்தை இறைவனே கவனித்துக்கொண்டிருக்கிறான் என்ற பக்தி மதக்கொள்கை எவ்வளவு வசிகரமானது! இதற்காக வராகாவதாரத்தையும் மேற்கொண்டான் என்பதில் விஷ்ணுபக்தர்களுக்கு ஒரு விசேஷ திருப்தி.

முதலாழ்வார் மூவருள்ளும் முதல்வரான பொய்கையாழ்வார் தம் 'முதல் திருவந்தாதியின் ஒன்பதாவது பாசுரத்தில் வராகாவதாரப் பெருமையைப் பாடும்போது மகாவராக ரூபத்தின் உட்பொருளைக் குறிப்பாக உணர்த்துகிறார். பகவான் அடியவர்களுக்குப் பணி செய்வதற்காகத் தன் ஆதியஞ்சோதி உருவையும் அழிய மாறுபடுத்திக் கொள்கிறானும்; இழிபிறப்பை ஏற்றுக்கொண்டும் அன்பர்பணியே கண்ணாயிருக்கிறானும்.

பகவானுடைய கருணைக்கு ஒரு வரம்பில்லை. 'இப்படித்தான் நம்மைக் காப்பாற்றுவான்' என்றும் ஒரு நியதி இல்லையோ?— என்று வியக்கிறார்கள் பக்தமணிகள். தலையிலே காலை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்றல்லவா அடியவர்கள் அடைக்கலம் புகுந்து பிரார்த்திக்கிறார்கள். 'ஆபத்து வந்தால் தலையாலே சுமந்தும் அடியவரைக் காப்பாற்றுகிறானும் ஆண்டவன், இதற்கு, வராக மூர்த்தி தன் எயிற்றிலே பூமியை எடுத்துக் கொண்டு திரிந்த கதையையும் ஒரு சான்றாகக் காட்டுகிறார்கள்.

துஷ்ட அசுரனைக் கொன்ற எயிறு பூமி தேவியை எவ்வளவு மென்மையாகத் தாங்கிக்கொண்டு வந்தது! மனிதனையும் மற்றப் பிராணிகளையும் தன் பற்களால் கடித்துக் கொல்லும் புலி, தாய்ப்புலி என்ற நிலையில் குட்டியை அதே வாயில் கவ்விக்கொண்டு போகிறதல்லவா? 'இதற்குக் குறைந்ததா தாகுமோ இறைவனுடைய தாயன்பு?' என்று பக்தர்கள் பரவசமாகிறார்கள், வராகாவதாரத்தின் பொருளைச் சிந்திக்கும்போது.

இந்த வராகாவதார தத்துவத்தை நோக்கும்போது, 'ரக்ஷ்யவர்க்கத்தை (காப்பாற்ற வேண்டிய இனத்தை) நோக்குமளவில், உனக்கு ஒரு நியதி உண்டோ? என்று உகந்து அநுபவிக்கிறார்' பொய்கையாழ்வார் என்பது வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து.

ஸ்ரீவாஞ்சியம், ஸ்ரீ மங்களாம்பிகா உடன்கூடிய வாஞ்சிநாதசுவாமி கோயிலில் ஆடிப்பூரத் திருவிழா 29-7-59 முதல் 7-8-59 முடிய சிறப்பாக நடைபெற்றது.

**திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னம் பாலிப்பு:**

சைவ சமயகுரவர்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளானை மீதும், அவரது உற்ற நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் குதிரையின்மீதும் ஆடிச் சுவாதியில் திருவஞ்சைக் களத்திலிருந்து புறப்பட்டு திருக்கயிலை சேர்ந்தனர். இந்நன்னாளை ஒட்டி கேரளநாட்டுத் திருவஞ்சைக் களத்தில் சேரமான் பெருமாள் நாயனார் நினைவில் அன்னம் வழங்கும் பொருட்டு திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளால் 25-9-1948-ல் "திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் அன்னம் பாலிப்பு'' என்னும் பெயரால் ரூ. 7,000- மூதல் பொருளில் ஒரு அறக்கட்டளை ஏற்படுத்தி அவ்வூரில் ஆடிச் சுவாதியில் அன்னம் வழங்குவது போல் இவ்வாண்டும் 11-8-59 செவ்வாய்க்கிழமை திருவஞ்சைக்களத்தில் அன்னம் வழங்கப்பட்டது. அன்பர்கள் அனைவரும் அஞ்சைக்களத்தப்பரை வணங்கி ஏழிசை இன்தமிழால் ஏத்தினர்.

# ✳ தொகையடியார் ✳

பெரிய புராணத்தில் பேசப்பெறும் தொண்டர்கள் 63 தனியடியார்களும், 9 தொகையடியார்களும் ஆவர். ஊர், பேர், அற்புதச் செயல்கள் இவைகளோடு கூடியவை 63 நாயன்மார்களின் வரலாறுகள். இவைகளுக்குள் அடங்காமல், பல பண்பாடுகள், தகுதிகள் முதலியவற்றையுடைய பெரியோர்களைப் பொதுவகையாற் தொகுத்துக் கூறப் பெற்றவர்கள் தொகையடியார்கள். திருத்தொண்டர் புராணத்தில் 'உலகெலாம்' என்ற முதற்செய்யுளில் ஒன்பது 'உ'காரங்கள் வருகின்றன என்றும், அவை தொகையடியார் ஒன்பதின்மரைக் குறிக்கும் என்றும் கூறுவர். தில்லைவாழ்ந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன் பால் வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதுந்திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச் சார்ந்தார் என்பவர் அவ்வொன்பது கூட்டத்தினரும். அறுபத்து மூன்றுநாயன்மார்களுக்கும் பல கோயில்களில் திருவுருவங்கள் உள்ளன. சிதம்பரம் கோயிலில் சிவகங்கை தீர்த்தத்துக்கு வடபால் ஒன்பது இலிங்கங்களுடைய சந்நிதி யொன்றுள்ளது. அது 'திருத்தொண்டத் தொகையீச்சரம்' என்ற பெயருடையது. ஒன்பது தொகையடியாரைக் குறிப்பதற்கு ஏற்பட்டதே அக்கோயில். சுந்தரர் திருத்தொண்டத் தொகையிலும், நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியிலும், சேக்கிழார் பெரிய புராணத்திலும் தொகையடியார்களைப்பற்றிக் கூறியுள்ளனர்.

1. **தில்லைவாழந்தணர்:** தில்லை நடராஜர் முதல்வராகவுடைய மூவாயிரம் அந்தணர்; இறைவன் திருவடித்தொண்டு பூண்டு ஒழுகுபவர்; நான்மறை, ஆறங்கம் வல்லவர்; தூய மரபினர்; திருநீற்றின் செல்வத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டவர்; தானம் தவம் செய்பவர்; மானம் பொறை உடையவர்: திருத்தொண்டத் தொகையின் முதலில் வைத்துத் திருவாரூர்ப் பெருமான் திருவாக்கினுற் சொல்லப் பெற்ற பெருமையுடையவர்; இம்மையில் இறைவனைக் கிடைக்கப் பெற்றவர்,

2. **பொய்யடிமையில்லாத புலவர்:** சொல் தெளிவு, பொருள் தெளிவு இவைகளால் உண்டாகும் புலமை இறைவன் திருவடிக் காளாதற் பொருட்டேயென்று துணிந்தவர்; சிவபெருமானையன்றி வேறொருவரையும் பாடாத மெய்யடியவர். இவர்கள் சங்கப் புலவர்களான நக்கீரர், கபிலர், பரணர் முதலாகிய பல புலவர்கள் என்பர். 'பொய்யடிமையில்லாத புலவர்' மாணிக்கவாசகர் என்று கருதுவோரும் உண்டு.

3: **பத்தராய்ப் பணிவார்:** ஆசையோடும் அரனைவழிபடுதலும், அடியாரைச் சார்ந்து வழிபடுதலும் செய்பவர்; செய்யும் எத்தொழிலும் சிவனுக்கென்றே இயற்றுபவர்; "நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், மென்றாலும், விழித்தாலும், இமைத்தாலும் மன்றுடும் மலர்ப்பதமொருகாலும்" மறவாதவர்.

4. **பரமனையே பாடுவார்:** சிவபெருமானையே பொருளாகக் கொண்ட இயலிசைப் பாட்டுக்களை உள்ள முருகிப் பாடுபவர்.

5. **சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்:** பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்து விளங்கும் நாதாந்தத்திலே சித்தம் வைத்துச் சிவத்தை யடைந்து நிற்பவர்,

6. **திருவாரூர்ப் பிறந்தார்;** திருக்கயிலை வீற்றிருக்கும் திருக்கணத்தாரே திருவாரூர்ப் பிறந்தவர்கள். 'திருவாரூர் பிறக்கமுத்தி' என்பது பழமொழி.

7. **முப்போதும் திருமேனி தீண்டுவார்:** எப்போதும் இனியராகிய சிவபெருமானை, சிவாகம நெறிவழுவாமல், அப்போதைக்கப் போது ஆர்வமிகும் அன்பினராய் முப்போதும் அருச்சிக்கும் ஆதிசைவர்கள்.

8. **முழுநீறுபூசிய முனிவர்:** தருமசீலர்; தத்துவ நெறியுணர்ந்தவர்; நீதிபிழையாநெறி நிற்பவர்; விதிப்படி எடுத்த திருநீற்றை, சிவனைப்போற்றி மேனிமுழுதும் அணியும் முனிவர்.

9. **அப்பாலும் அடிச்சார்ந்தார்:** தமிழ் நாட்டுக்கு அப்பாற்பட்ட நாடுகளிலும், திருத்தொண்டத் தொகையில் போற்றப் பட்ட அடியார்கள் காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமானது அடியைச் சார்ந்தவர்கள்.

# சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

## அடிப்படைக் கொள்கைகள்

### 1. பிரமாண நூல்கள்

பன்னிரு திருமுறைகளும், பதினன்கு சாத்திரங்களும், இவற்ருேடு மாறுபடாத வேத ஆகமப் பகுதிகளும் பிரமாண நூல்கள் ஆகும்*

இவற்றின் வழிவந்து பொருண் முடிபு மாறுபடாத பிறநூல்களும் தழுவிக்கொள்ளப்படும்.

### 2. இருவகை ஆசிரியன்மார்கள்

ஆசிரியன்மார்கள் சைவ சமய குரவர்கள் எனவும், சைவ சந்தான குரவர்கள் எனவும் இரு திறப்படுவர்.

(க) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பி ஆரூரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் சைவ சமய குரவர்கள் ஆவார்கள்.

இவர்கள் தம் அருள் வாழ்க்கையாலும், வாய்மொழிகளாலும், அற்புதங்களாலும் சைவ சமயமே மெய்ச்சமயம் என விளக்கியருளினவர்கள்.

(உ) மெய்கண்ட தேவர், அருணந்தி சிவனர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவனர் என்னும் நால்வரும் திருக்கயிலாய பரம்பரைச் சந்தானகுரவர்கள் எனப்படுவார்கள்.

இவர்கள் சிவபிரான் முதலாக, ஆசாரிய மாணுக்க முறையில் இடையறவுபடாத உபதேசக் கிரமத்தைப் பெற்று இவ்வுலகிற்குக் கொடுத்தருளியவர்கள். மேலும், சிவாகம ஞானபாதங்களால் விரித்துக் கூறப்படும் வேதங்களின் ஞானகாண்டப் பொருள் முடிபுகளைச் சுருக்கி விளக்கும் சித்தாந்த சாத்திரங்களைச் செந்தமிழ் மொழியில் அருளிச் செய்து உபகரித்தவர்கள். இவர்களுள் மறைஞானசம்பந்தர் செய்ததாக நூல் ஒன்றும் இல்லை.

### 3. முடிநிலை உண்மைப் பொருள்கள் (Ultimate realities)

இறை, உயிர், தளை, என்னும் மூன்றும் தோற்றம் ஈறின்றி என்றும் உள்ள பொருள்கள். இவை முறையே பதி, பசு, பாசம் எனக் கூறப்படும்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள; மறையெலா மொழிய நின்றன:
ஆன்றதோர் தொல்பதி ஆரு யிர்த்தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே

என்பது கந்தபுராணம்.

### 4. முப்பொருள்களுக்கிடையே உள்ள சம்பந்தம்

இங்குக் கூறிய முப்பொருள்களுள், இறை இயற்கை முற்றுணர்வுடையது; ஏனைய இரு பொருள்களையும் தன் ஆற்றலின் அடங்கக்கொண்டு தொழிற்படுத்துவது. அஃது ஒன்றே, பல அன்று.

உயிர் பல. உணர்த்த உணரும் செயற்கை

---

* இத்தொடர் சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் அடிப்படை உண்மைகளிலிருந்து எழுதப்படுகிறது. இது, 1930-ல் திருப்பாதிரிப்புலியூரில் நடைபெற்ற சைவர் பேரவையில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளும், ஆசிரியர் மறைமலையடிகளும் எடுத்துக் கூறப் பேரவையினர் ஏற்றுக்கொண்டது.

யுணர்வு உடையது. ஏனை இரண்டையும் தலைப்பட்டு அறிந்து அநுபவிப்பது.

**தளை** ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இவை உயிர்களின் ஆற்றலைத் தடை செய்து துன்புறுத்தும் சடப் பொருள்கள் ஆம். உயிர்களின் பிறப்பு நிலைக்கு இவையே காரணமாக உள்ளவை. சடம்—அறிவில்லது.

## 5. உயிர்களின் இருநிலை

உயிர்களுக்குப் பிறப்பு நிலை, வீட்டு நிலை என இரு நிலைகள் உண்டு. அவை தளை வயப்பட்டுப் பிறந்து இறந்து உழலும் நிலை பிறப்பு நிலை எனப்படும். பந்தம், பெத்தம், பிறப்பு, கட்டு என்பவை ஒரு பொருளை யுடைய சொற்கள்.

இறை திருவருளால், அவை தளையின் பிடிப்பிலிருந்து விடுபட்டு, இறையை அணைந்து, தூயபேரின்பத்தை அநுபவிக்கும் நிலை வீட்டு நிலை எனப்படும். இது **முத்தி நிலை** எனவும் **பேரா இயற்கை** எனவும் வழங்கும்.

இறை உயிர்க்கு உறவாக **நின்று** என்றும் உபகரிக்கும் பொருள். தளை பிறப்பு நிலையில் உயிர்களைப் பந்தத்துக்கு உட்படுத்தி நின்று வீட்டு நிலையில், தன் சத்தி மடங்கி, அடங்கி நிற்கும் **பகைப் பொருள்.**

உயிர்களும் தளைகளும், பந்தம் வீடு எனப்பட்ட இருநிலைகள்பற்றி மேற்கூறிய படி, தம் இயல்பு வேறுபடுவன. இறை அவ்வாறு நிலை வேறுபாடு இல்லாது உள்ள செம்பொருள். ஆதல்பற்றி அது **சத்து** எனப்படும். "**பந்தமும் வீடும்ஆய பதபதார்த்தங்கள் அல்லான்**" என்பது சிவஞான சித்தியில் உள்ள தொடர். "அநாதிமுத்த சித்துருவாகிய எந்தை கட்டு வீடு என்னும் பதங்களையுடைய பசுபாச பதார்த்தங்களது இயல்புடையன் அல்லன்"; 'பதம் - அவ்வச் செவ்வி'—என்பவை அத்தொடரின் உரைப் பகுதிகள்.

இங்ஙனம் விளக்கப்பட்ட முப்பொருள்களும் ஒன்றிலிருந்து பிறிதொன்று தோன்றியது எனவோ, ஒன்று மற்றொன்றாக மாறும் எனவோ கூறப்படாத அநாதி நித்தியப் பொருள்கள்.

இங்குக் கூறிய அடிப்படை உண்மையை மனத்துக்கொண்டு மறவாது நினைத்தற்குப் பின்வரும் திருஞானசம்பந்தர் திருவாக்குத் துணைபுரியும்:—

> **"விளையாததொர் பரிசில்வரு**
> **பசுபாசவே தனையொண்**
> **தளையாயின தவிரவ்வருள்**
> **தலைவன்னது சார்பாம்."**

இதன் பொருள்: தோற்றம் இல்லாத தன்மையில் வரும் பசு (உயிர்), பாசம், வேதனை, ஒண்தளை என்னும் மூவகைப் பந்தத்திலிருந்து விடுபட்டு உய்யும்படி அருள் புரியும் முதல்வனது இடம் (முதுகுன்றம்) ஆகும்.

பாசம்—ஆணவம். வேதனை—வேதனைக்குக் காரணமாகிய கன்மம். ஒண்தளை-உயிரின் அறிவைச் சிறிதே விளக்கும் தளையாகிய மாயை.

உயிர் அநாதி பாசபந்தம் உடையதாதல் பற்றிப் பசு எனப்பட்டது. பச்-பந்தித்தல், உ-செயப்படு பொருள் விகுதி. பாசம்-கட்டும்கருவி. பச்-கட்டுதல், அ-கருவிப் பொருள் விகுதி. பசுக்களைப் பாசத்திலிருந்து விடுவித்துக் காத்தல்பற்றி முதல்வன் **பதி** எனப்படுகிறான். பதி-காக்கிறவன். பா-காத்தல், தி-வினைமுதற் பொருள் விகுதி.

# முப்பொருள் இயல்பு

## 1. முதல்வன் இயல்பு

முதல்வன் தூய அறிவே வடிவாய் என்றும் உள்ளவன். உயிர்களின் சுட்டறிவைக் கடந்து நிற்றலின் **கடவுள்** எனப் பேசப்படுகின்றான். தானே எல்லாம் உணரும் இயற்கை முற்றுணர்வு உடையவன். பசு, பாசங்களைத் தன் வியாபகத்தில் அடங்கக் கொண்டு தொழிற்படுத்துகின்றவன். இவ்வாறு உயிர்களையும் உலகையும் இடமாகக் கொள்ளுதலினால் **இறைவன்** எனக் கூறப்படுகிறான். இறுத்தல்-தங்குதல். அவற்றைத் தொழிற்படுத்துதல் பற்றி **இயவுள்** என உரைக்கப்படுகிறான். உயிர்க்கு உயிராய் நின்று உயிர்களின் உணர்வைத் தடுத்து நிற்கும் பாசத்தடையை நீக்கி, அவற்றின் அறிவு செயல்களை விளக்கி வளர்த்து வருதல் பற்றி

**அம்மையப்பர்** எனவும், **உணர்வின்நமி** (உயிர்களின் உணர்வுக்கு முதல்வன்) எனவும் கூறப்படுகின்றான்.

காணப்படும் எவ்வகைப் பொருளுக்கும் முற்பட்ட பொருளாய், அவையெல்லாவற்றுக்கும் முடிந்த சார்பாய் நின்று, அவற்றைத் தொழிற்படுத்துவோன் ஆதல்பற்றி **முதல்வன்** எனவும், **ஆதி** எனவும், **தலைவன்** எனவும் ஓதப்படுகின்றான்.

## 2. முதல்வன் சிவம் சத்தி என ஈரியல்புடையனுதல்

சூரியன், பூமி முதலிய பொருள்களுக்கு ஈர்ப்புச்சத்தி (Gravitational Force) உண்டு என்பதை அறிவோம். ஆனால் அச்சத்தியை நாம் காணவில்லை; அச்சத்தியின் வயப்பட்டுச் சுழலும் கோள்கள் உபகோள்கள் என்பவற்றின் இயக்கங்களைக் கண்டுதான் ஈர்ப்புச் சத்தியின் உண்மையினையும் அதன் இயல்பினையும் கருதி உணர்கிறோம். முதல்வன் சத்தியை (இதுபோலவே) நாம் காண்பதில்லை. ஆனால், முதல்வனது சத்தி வயப்பட்டு நடக்கும் பசுபாசங்களின் தொழிற்பாடு பற்றி அச்சத்தியின் உண்மையினையும் இயல்பினையும் கருதி உணரவேண்டும். ஞாயிற்றைப் போல முதல்வன் உள்ன்; அதன் ஈர்ப்புச் சத்தியைப் போல முதல்வனது சத்தி உள்ளது, **சத்தி** என்னும் சொற்குப்பொருள் **வல்லமை** அல்லது **ஆற்றல்** என்பது ஆகும்.

ஒரு பொருள் பிறிதொரு பொருளைத் தன்வயப்படுத்தி நடத்தும் இடங்களில் எல்லாம் அப்பொருள் இருதன்மைப்பட்டு இயைந்து நிற்கும். அதாவது, தானும், தன் சத்தியும் என இருதன்மைப்பட்ட ஒரு பொருளாய் நிற்கும். மேற்காட்டிய உதாரணங்களில், ஞாயிறு தனக்கு வேறுகிய கோள்களை (நிலம், செவ்வாய், புதன், முதலியவற்றை)த் தன்வயப்படுத்தித் தன்னைச் சுற்றிச் சுழன்றுவரச் செய்கின்றது. ஆதலினால், அது ஞாயிறு எனவும், ஞாயிற்றின் ஈர்ப்புச் சத்தி எனவும் இருதன்மைப்பட்ட ஒரு பொருளாய் உள்ளது. இதுபோலவே முதல்வன், தானும் தன் சத்தியும் என இருதன்மைப்பட நின்று உயிர் உலகுகளைத் தன் வயப்படுத்தி நடாத்துகின்றான் என ஞான நூல்கள் கூறுகின்றன.

உலகத்துப் பொருள்கள் எல்லாம் மூன்றுவகைப்படும் நிலை வேறுபாடுகளை உடையன. ஒருகாலத்து உருப்பெற்றுத் தோன்றுதலும். தோன்றிய பின் ஒருகாலத்து உருக்குலைந்து பயன்படாது மறைதலும் உலகப் பொருள்களின் பொதுவியல்பாகக் காணப்படுகின்றன. இவ்வாறே உயிர்களும் உடம்போடு கூடிப்பிறத்தலும், பிறந்து உடல் வளர்ச்சி, உணர்வு வளர்ச்சி என்பவற்றை முறைமுறையே பெற்றுத் தொழிற்பட்டு, இன்பத் துன்பங்களை நுகர்ந்து வருதலும், பின் ஒருகாலத்து உடம்பு தன் நிலை குலைதலால் அதனை விட்டிறத்தலும் புரிகின்றன. இன்னும் உடம்போடு கூடிவாழுங் காலத்திற்கூட, அன்றாடம் நனவு, கனவு, உறக்கம் என்னும் உணர்வு நிலைகள் மாறி மாறி நிகழப்பெற்று வருகின்றன. இங்ஙனம் உலகு உயிர்களின் மாட்டு நிகழும் செயல்கள் எல்லாம் முதல்வனது விருப்பின்படி, அவனது **நினைவு ஆற்றலால்** (சத்தி சங்கற்பத்தால்) நிகழ்கின்றன என்பது மெய்யுணர்ந்த பெருமக்கள் துணிபு. "**மன்னுசிவன் சந்நிதிக்கண் மற்றுலகம் சேட்டித்தது என்னும் மறை**" என்பது மெய்கண்ட தேவர் வாய்மொழி.

இதுவரையில் கூறியதிலிருந்து பின் வரும் முடிபு உணரப்படும். முதல்வன் தனக்கு வேறுகிய உலகு உயிர்களோடு கலந்து தொழிற்படுத்தும் நிலையில் **சத்தி** எனப்படுகின்றான். அவனுக்கு உலகு உயிரோடு உள்ள தொடர்பைக் கருதாது, முத்தான்மாக்களுக்கு அவன் அனுபவப்படும் தன்மையைக் கருதி அவனை உண்மை அறிவின்பப் பொருளாகக் கருதும்போது **சிவம்** எனப்படுகின்றான். இவ்விரண்டியல்பையும் உடையவன் ஒருவனே. இவ்வியல்புகளை உடையவனுய் உலகுயிர்களை ஐவகைத் தொழிலின் அகப்பட வைத்து ஆட்சி புரியும் நிலையில் முதல்வன் **பதி** எனவும், **அம்மையப்பர்** எனவும், **ஈசுவரன்** எனவும் வழங்கப்படுகிறான்.

முதல்வனது சத்தி திருவருள் எனவும், திருவடி எனவும், சிவஞானம், அம்மை எனவும் வழங்கும்.

## 3. முதல்வனது குணமும் உருவமும்

முதல்வனது இயல்பை ஞாயிறு ஆகிய உவமையில் வைத்து விளக்குதல் மரபு. அது பற்றி அவன் தேவசவிதா அல்லது சிவசூரியன் எனப்படுவன்.

ஞாயிற்றின் ஒளியே ஞாயிற்றுக்குக் குணமும் சொரூபமும் ஆகும். ஞாயிற்ருல் நாம் எய்தும் பயன்கள் எல்லாம் அதன் கதிர் எனப்படும் ஒளியால்தான். இதுபோலத் திருவருள் எனப்படும் சத்தியே முதல்வனுக்குக் குணமும் சொரூபமும் ஆகும். முதல்வனுல் நாம் எய்தும் பயனெல்லாம் சிவசத்தியாலே ஆகும். ஞாயிறு சிவத்துக்கு உவமை. அதன் ஒளி சத்திக்கு உவமை.

உயிர்களாகிய நாம் நமக்கு வேருகிய பொருள்களைப் பற்றுவதும் அவற்றைத் தொழிற்படுத்துவதும் உடம்பையும் அதன் உறுப்புக்களையும் பெற்றே. அன்றியும், ஒரு செயலைச் செய்யும்போது உடம்பு, கரணம் (கருவி), இடம், ஆடை அணி என்பவற்றை அச் செயலுக்குத் தக்கவாறு கொண்டு செய்கிரேம். இதுபோல, முதல்வனுக்கு உடம்பு, கரணம், இடம், ஆடை, அணி என்பவையெல்லாம் அவன் திருவருள் எனப்படும் சத்தியும் அதன் கூறுகளுமே ஆகும். நாம் உடம்பு முதலியவற்றை மாயையின் காரியங்களாகப் பெற்றுத் தடைப்படும் அறிவு செயல் உடையேமாய், அவற்றின் வயப்பட்டு நடக்கிறோம். முதல்வன் தனது சத்தியையே உடம்பு முதலியனவாகக் கொண்டு தன்வயம் உடையோனுய் எல்லாச் செயலையும் செய்கின்ருன்.

இக்காரணத்தால் முதல்வனுக்கு எஞ்ஞான்றும் பிறப்பு இறப்புக்கள் கூறப்படுவதில்லை. அவன் அன்பர்களுக்கு அவ்வப்போது காட்டியருளும் திருவுரு அவன்றன் சத்தியால் அமைந்தது ஆகலின், அது பிறவா யாக்கை எனப்படும்.

## 4. திருக்கோயிலில் வைத்து வழிபடப்படும் திருவுருவங்கள்

திருக்கோயில் முதலிய இடங்களில் முதல்வனுக்கு உரியனவாக வைத்து வழிபடப்படும் திருவுருவங்கள் எல்லாம் ஓரோர் காலத்து அவன் தவமிக்கோர்க்குக் காட்டியருளிய திருவுருவங்களே ஆகும். அவை போக வடிவம், யோக வடிவம், கோர வடிவம் என மூவகைப்படும். போக வடிவங்கள் போகத்தை விரும்புவோரால் தியானம் பூசை முதலியவை செய்தற்கு உரியவை. ஞான யோகத்தை விரும்புவோர் வழிபடுதற்கு உரியவை யோக வடிவங்கள். பகைவராலும் நோயாலும் நலிந்தோர் வழிபட்டு வினைநீக்கம் பெறுதற்கு உரியவை கோர வடிவங்கள்.

"உருவருள்; குணங்க ளோடும்
உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள்;அ ரன்றன்
கரசர ணுதி சாங்கம்
தரும்அருள்; உபாங்கம் எல்லாம்
தான்அருள்; தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே
ஆக்கினன் அசிந்தன் அன்றே"

"போகியா யிருந் துயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி
உதவுத லதுவும் ஓரார்;
வேகியா னுற்போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்;
ஊகியா மூடரெல்லாம் உம்பரின்
ஒருவன் என்பர்"

என்பவை சிவஞான சித்தியாரில் வரும் பாட்டுக்கள்.

"மாயை காரிய உருக்களும்
எம்பிரான் வடிவம்
ஆய வேல்அவை
அருள்மயம் ஆகும்"

என்பது காஞ்சிப் புராணம்.

(தொடரும்)

# வைஷ்ணவம்

## 1. சங்ககாலத்திலே

(பி. ஸ்ரீ)

### (வித்தில் மகாவிருட்சம்)

வைணவ சரித்திரத்திலே பெரும்புகழ் பெற்றிருக்கும் தலங்களில் ஒன்று திருக்கோவலூர். இவ்வூரில் முதலாழ்வார்கள் என்று சொல்லப்படும் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் ஒரு வீட்டின் இடைகழியில் சந்தித்துத் திருமாலைப் பாடித் தரிசித்துப் பேறுபெற்ற கதை அனைவரும் அறிந்ததே.

**மூவரும் நெருக்கி**
**மொழிவிளக்(கு) ஏற்றி**
**முகுந்தனைத் தொழுத**

திருக்கோவலூர் சங்க காலத்திலும் பிரசித்தி பெற்றிருந்தது.

### சூரியனை வெளிப்படுத்திய 'அஞ்சன உருவன்'

திருக்கோவலூரைத் தலைநகரமாகக் கொண்டது மலையமான் நாடு. இந்நாட்டை ஆண்டவர்கள் குறுநில மன்னர்களே. இவர்களில் சிறந்தவன் மலையமான் திருமுடிக்காரி என்பவன். இவனுடைய மைந்தன் திருக்கண்ணன். இவனுடைய வீரபராக்கிரமச் செயல் ஒன்றுக்குத் திருமாலின் லோகோபகாரச் செயல் ஒன்றை ஒப்பிட்டுப் பாடுகிறார் சங்ககாலப் புலவர் ஒருவர்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரை உலகத்தின் ஆதிமகாயுத்தம் என்று புராணம் கருதுகிறது. 'தேவாசுர ராமாயண மாபாரதம்' என்று புராண இதிகாச காலத்தைச் சேர்ந்த மூன்று உலக மகாயுத்தங்களை முறைப்படுத்திக் கூறுகிறது **கலிங்கத்துப் பரணி**. இவற்றுள் முதலாவது மகாயுத்தமான தேவாசுரப் போராட்டம் நிகழ்ந்தபோது, அசுரர் கூட்டமானது சூரியனை மறைத்துவிட்டதாம். அதனால் உலகம் இருட்டிலே கிடந்து அல்லற்பட்டது. அப்போது தேவர்களுக்காகவும் உலகத்திற்காகவும் இரங்கித் திருமால் அசுரர் மறைத்த சூரியனைக்கொண்டு வந்து வழக்கம்போல் ஒளிவீசச் செய்தாராம். இந்த லோகோபகாரச் செயலோடு தான் மேலே குறித்த சங்கப்புலவர் தம்மை ஆதரித்த திருக்கண்ணன் என்ற அரசனின் வீரப்பெருஞ் செயலொன்றை ஒப்பிடுகிறார்.

சோழநாடு அரசன் இன்றி ஒளியிழந்திருந்தது. பகைவர்கள் சோழன் புகழை மறைத்து விட்டார்கள்-அசுரர்கள் சூரியனை மறைத்தது போல. இந்த நிலையில் திருக்கண்ணன் என்ற திருக்கோவலூர் அரசன் மறைந்த சூரியனை மறுபடியும் கொண்டுவந்து ஒளிரச் செய்ததுபோல் மறைந்திருந்த சோழனை வெளிக்கொணர்ந்து வழக்கம்போல் சோழ நாட்டை ஆளச்செய்தான். இது **நப்பசலையார்** என்ற பெண்புலவர் தரும் செய்தி.

இப்புலவர் திருமாலை 'அஞ்சன உருவன்' என்று குறிப்பிடுகிறார். கருநிறமுள்ள கண்ணனையும் இராமனையும், பொதுவாகத் திருமாலையும் கவிஞர்கள் இப்பெயரால் குறிப்பிடுகிறார்கள். சங்ககாலத்து ஔவையாரும் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் கரியமலை ஒன்றை விஷ்ணுவை ஒத்திருப்பதாக வருணிக்கிறார்;

**விண்டு அனைய**
**விண்தோய் பிறங்கல்**

[விண்டு-விஷ்ணு. விண்தோய்-வானளாவிய. பிறங்கல்-மலை.]

'அஞ்சன உருவன்' என்று நப்பசலையார் குறிப்பிடும் திருமாலைத் தான் 'மாயோன்'

என்றார் தொல்காப்பியர். 'மாயோன்' என்பதும் 'கருநிறம் உடையோன்' என்று பொருள் தருகிறது. 'கண்ணன்' என்பதற்கும் இப்பொருள் கூறுவதுண்டு. தேவாசுரப் போராட்டத்தில் அசுரர் மறைத்த சூரியனைத் திருமால் வெளிக்கொணர்ந்த கதையோடு ஒப்பிடத்தக்கது மகாபாரதப் போரில் கண்ணபிரான் சூரியனை மறைத்தார் என்ற செய்தி. இந்த இரண்டு செய்திகளும் திருமாலின் ஸர்வ வல்லமையையும் உலகத்திற்கு உபகரிக்க வேண்டும் என்ற கருணையையும் நினைவூட்டுகின்றன.

விஷ்ணுவின் ஸர்வ சக்தியையும் பரம கருணையையும் தொன்று தொட்டே வைணவ சமயம் கொள்கைகளிலும் கதைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கிறது. சங்க காலத்திலும் தொல்காப்பியர் காலத்திலும் வைணவம் தமிழ் நாட்டில் வழங்கி வந்தது என்பதில் ஐயமில்லை.

## தொல்காப்பியரும் திருமாலும்

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் காடு சார்ந்த நிலமான முல்லைக்கு அதிதெய்வம் திருமால் என்று கூறியிருப்பதைப் பலரும் அறிவர்.

**அங்கண் முல்லையின்**
**தெய்வம்என்(று) அருந்தமிழ்**
**உரைக்கும்**
**செங்கண்மால்**

என்ற திருவாக்கில் சேக்கிழார் பெருமான் தொல்காப்பியர் முதலான ஆதித்தமிழாசிரியர்களின் கொள்கையை அழகாய் வெளியிட்டிருக்கிறார்.

முல்லை நிலத்தைச்சார்ந்த தமிழ் மக்கள் திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வந்தனர் என்ற குறிப்பையும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலே காண்கிறோம். 'பூவை நிலை' என்ற புறத்துறை கூறும்போது இக்குறிப்பைக் காண்கிறோம். 'பூவை நிலை' என்றால் காயாம்பூவை (ஒருவகை நீல மலரை)க் கண்ணன் நிறத்தோடு உவமித்துப் புகழும் புறத்துறை.

**மாயோன் மேய**
**மன்பெருஞ் சிறப்பின்**
**தாவா விழுப்புகழ்ப்**
**பூவை நிலையும்**

என்பது தொல்காப்பியர் கூற்று.

மாயோனாகிய திருமாலின் புகழை 'விழுப்புகழ்' (பெரும்புகழ்) என்கிறார். 'தாவா விழுப்புகழ்ச்'—கேடுஇல்லாத பெரும் புகழ் என்கிறார். இப்படிச் சொல்லியும் திருப்தி அடையாமல் 'பெருஞ்சிறப்பின் தாவா விழுப்புகழ்' என்கிறார். இப்படிப் பெருஞ்சிறப்புடன் கேடு இல்லாது தழைக்கும் பெரும்புகழை 'மன்' என்றும் சிறப்பித்துப் பேசுகிறார். இப்பெரும்புகழ் மாயவனிடம் பொருந்தி நிலைபெற்றிருக்கிறதாம். இதனால் தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க ஒரு பிரிவினர் தொல்காப்பியர் காலத்தில் திருமாலையே முழுமுதற்கடவுளாக வழிபட்டு வந்தனர் என்று ஊகஞ் செய்வது பொருந்துவதே.

தெய்வக் குழந்தையாகிய கண்ணபிரானிடம் கோபிகைகள் காதல் கொண்ட செய்தியும் தொல்காப்பியர் காலத்திலே பிரசித்தமாக வழங்கியது என்று கருதுவதற்கும் தொல்காப்பியத்தில் ஒரு குறிப்பு இருக்கிறதென்று ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. மு. இராகவையங்கார் கூறி ஆதாரமும் காட்டியுள்ளார்,

**'காமப் பகுதி கடவுளும் வரையார்**
**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'**
**'குழவி மருங்கினும் கிழவதாகும்'**

என்ற சூத்திரங்களில்.

'மானிடராகிய பெண் மக்கள் அவ்வினத்து ஆண்மக்களிடமும் குழவிகளிடமுமே யன்றி, கடவுளரிடத்தும் கடவுட் குழவிகளிடத்தும் (தெய்வக் குழந்தைகளிடத்தும்) காமப்பகுதி செலுத்தற்குரியர் என்று தொல்காப்பியனார்...விதி கூறுவர்' என்று கூறும் திரு. மு. இராகவையங்கார் இந்த விதியை ஒட்டித் தோன்றியன 'ஆண்டாளும் ஆழ்வார்களும் அநுகரித்துக் கூறிய காதற்பாசுரங்கள் யாவும்' என்கிறார்.

'அறுபொருள் இவன் என்றே அமரர் கணம் தொழுதேத்த...' என்று **சிலப்பதிகாரம்**, 'ஆய்ச்சியர் குரவை'யில் அற்றுத்

தீர்ந்த பரம்பொருளாகக் கண்ணன் என்ற குழந்தைத் தெய்வத்தைக் குறிப்பிடுகிறதல்லவா? இக்கொள்கை தொல்காப்பியர் காலத்திலும் சங்ககாலத்திலும் தமிழ்நாட்டில் சில பகுதிகளிலாவது வழங்கி வந்த கொள்கை தான். இது மட்டுமா? கண்ணன் என்ற பரம்பொருளைக் காதல் துறையில் (ஜீவாத்மா பரமாத்மாவைக் காதலிப்பதற்கு அறிகுறி குறியாக) வழிபட்டு வந்த சம்பிரதாயமும் தொல்காப்பியர் காலத்திலேயே வழங்கி வந்ததுதான் என்று கருதுவது தவறாகாது.

## நப்பின்னைப் பிராட்டி

ஜீவாத்மா-பரமாத்மா காதலுக்கு ஓர் அறிகுறியாக வடநாட்டார் இராதையையும் கண்ணனையும் இடைக்காலத்தில் குறிப்பிடத் தொடங்கினர். ஆனால் முற்காலத்திலேயே தமிழ் மக்கள் நப்பின்னை என்ற ஆயர் மகளுக்கு இராதையின் ஸ்தானத்தை வழங்கியிருந்தனர். தமிழர்கள் நப்பின்னையையும் வழிபட்டு வந்தனர் என்பதற்குப் 'பரிபாடல்', 'சிலப்பதிகாரம்' முதலிய நூல்கள் சான்று தருகின்றன.

நப்பின்னைப் பிராட்டியைக் கண்ணபிரானுடன் வழிபட்டு வந்த அந்தப் பழைய முறை ஆழ்வார்கள் காலத்திலும் வழங்கி வந்தது என்பதற்குத் திவ்யப் பிரபந்தங்கள் சான்று தருகின்றன. தாயின் மூலமாகத் தந்தையின் அருளைப் பெறவேண்டும். நப்பின்னைப் பிராட்டியின் தயவைப் பெற்றுக் கொண்டு, கண்ணபிரானது பேரருளுக்கு இலக்காவது நலமாகும் என்ற கொள்கையும் பழைய காலத்திலேயே தமிழகத்தில் வழங்கி வந்தது.

'ஸ்ரீ' என்ற திருமகளின் தயவை முன்னிட்டு விஷ்ணுவைச் சரணமடைய வேண்டும் என்பதை வற்புறுத்தும் ஸ்ரீ வைஷ்ணவப் பெருங்கொள்கைக்கு, நப்பின்னையோடு கண்ணனை வழிபட்டு வந்த பண்டைத் தமிழர் வழக்கம் வித்தாகக் கருதத்தக்கது.

## கண்ணபிரானும் பலராமனும்

கண்ணனை வழிபட்டதுபோல் பலராமனையும் மக்கள் வழிபட்டு வந்தனர் என்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் சான்று கள் உண்டு. அண்ணன் தம்பி என்ற உரிமையுடன் பலராமனும் கண்ணனும் அன்புடன் ஒன்றுபட்டு வாழ்ந்து பக்தர்களின் வழிபாட்டை அங்கீகரித்து அருள்புரிந்தனர் என்ற கொள்கைக்கு ஓர் உட்பொருளாக ஒற்றுமைப் பொருள் ஒன்றும் காட்டுகிறார் புறநானூற்றிலே சங்கப் புலவர் ஒருவர்.

பெருவழுதி என்ற பாண்டியமன்னனும் கரிகாலன் என்ற சோழமன்னனும் பகைமையுணர்வை மறந்து ஒற்றுமையோடு சந்திக்கிறார்கள். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே' என்ற நல்லுணர்வுடன் இம்முடிமன்னர் இருவரும் சந்தித்ததைப் பாராட்டுகிறார் காரிக்கண்ணனார் என்ற சங்கப் புலவர்.

இந்த இரண்டு அரசர்களின் ஒற்றுமையைக் கண்டதும் புலவர்,

> **பால்நிற உருவின்**
> **பனைக்கொடி யோனும்**
> **நீல்நிற உருவின்**
> **நேமி யோனும்என்(று)**
> **இருபெருந் தெய்வமும்**
> **உடன்நின் றாஅங்கு,**

[பால்நிற உருவின்-பால்போன்ற வெண்ணிற உருவத்தை உடைய, பனைக் கொடியோன் - பனைக்கொடி உடைய பலராமன், நீல்நிற உருவின்-கருநிற உருவத்தையுடைய, நேமியோன் - கண்ணன், நின்றாஅங்கு - நிற்பதுபோல்.]

அந்த இரண்டு மன்னர்களும் ஒன்றுபட்டு அரசு செலுத்த வேண்டுமென்று பாடுகிறார்.

நக்கீரரும் பலராமனையும் கண்ணனையும் சேர்த்துக் குறிப்பிடுவதை வேறொரு புறநானூற்றுச் செய்யுளில் காண்கிறோம். இந்தப் பாட்டிலே பலராமகிருஷ்ணர்களுடன் சிவபெருமானும் முருகனும் பிரஸ்தாபிக்கப்படுவதைக் காண்கிறோம். நக்கீரர் காலத்தில் இந்த நான்கு தெய்வங்களின் வழிபாடுகளும் பிரசித்தமாக இருந்தன என்று கருதலாம்.

நன்மாறன் என்ற ஓர் அரசனைப் பாராட்டும் பாட்டு இது. சிவபெருமானைப் போல் சினங்கொண்டு பகைவர்களை அழிக்கிறான் நன்மாறன். இந்த அரசன் பலராமனை ஒத்திருக்கிறானும் வலிமையிலே. திருமாலை ஒத்திருக்கிறானும் புகழிலே. நினைத்ததை முடிக்கும் ஆற்றலில் முருகக் கடவுளை ஒத்திருக்கிறானும்.

நக்கீரர் கருத்திலே பலராமனுடன் கண்ணனை வழிபடுவது வலிமையோடு கூடிய தெய்வப் புகழை வழிபடுவது போலத் தோன்றுகிறது என்லாம். வலிமை வாய்ந்த

வீரத்தையும் அந்த வீரப் புகழையும் பிரிக்க முடியுமா?

பலராமனுக்கு ஆயுதம் கலப்பை, கொடி பனைக்கொடி, மேனி நிறம் வெண் சங்கை ஒத்தது என்கிறார் நக்கீரர். கண்ண னுக்கோ மேனி நிறம் நீலரத்தினத்தை நினைப் பூட்டுகிறதாம். கொடி கருடக்கொடி என் கிறார். பலராமனுடைய திருமேனியை,

**கடல்வளர் புரிவளை**
**புரையும் மேனி**
*[வளை-சங்கு. புரையும்-ஒத்த.]*

என்று வருணிக்கிறார். கண்ணன் திரு மேனியை

**மண்ணுறு திருமணி**
**புரையும் மேனி**

என்கிறார் நக்கீரர்.

## கண்ணன் வழிபாடு
### (வடக்கிலும் தெற்கிலும்)

கண்ணன் வழிபாடுதான் வைணவமாக, ஸ்ரீவைஷ்ணவமாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை ஆராய்ச்சி அறிஞர்கள் ஒருமுக மாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். திருப்பாற் கடலில் சர்ப்பசயனத்திலே அறிதுயில் அமர்ந்திருக்கும் பெருமாளையே 'அரவணை மேல் பேராயன்' என்று குறிப்பிடுகிறார் முத லாழ்வார்களில் ஒருவர்.

'அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த அணிதிரு அரங்கர் மணிதிகழ் முகுந்தர் அழ கிய மணவாளர்' என்றெல்லாம் பக்தர்கள் போற்றும் பேராயன் உலகத்தைக் கோன் இல்லாத மந்தையாக விட்டு விடுவதில்லை. எனவே,

**ஆராயும் வேதம்**
**அயர்(வு)எய்த ஆய்ச்சிகையில்**
**ஏரார் கடைகயிற்றால்**
**கட்டுண்ட எம்பெருமான்**

என்று பக்தர்கள் மனம் உருகுமாறு தன் பரம கருணையால் அவதரித்தருளினான் என் றும், இத்தகைய கிருஷ்ணாவதாரமே பரி பூர்ண அவதாரம் என்றும் வைணவர்கள் கருத்தொருமித்துக் கூறுகிறார்கள்,

கண்ணபிரான் அவதரித்த பிரதேசம் வடபகுதியாயினும், கிருஷ்ணபக்தி பண் டைக் காலத்திலே சிறப்பாக வளர்ந்து ஸ்ரீ வைஷ்ணவமாக ஓங்கியது தென்னகத்திலே தான். சங்ககாலத்திற்கு முன்பே கிருஷ்ண பக்தி தமிழகத்திற்கு வந்து நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதற்குத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் சான்று தருகின்றன. எப்படி வந்திருக்கக்கூடும் என்பதை ஊகித்து கொள்வதற்கு ஒரு சரிதக் குறிப்பாக நச்சி னார்க்கினியரின் தொல்காப்பியப் பாயிர உரைப்பகுதியைச் சுட்டிக் காட்டுகிறார் திரு. மு. இராகவையங்கார்.

தமிழ் முனிவராகிய அகத்தியனார் வடக்கே யிருந்து தெற்கே வந்ததாக ஒரு கதை வழங்குகிறதல்லவா? அம்முனிவர் 'துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் வழிக்கண் பதினெண் குடிவேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் (ஒரு வகுப்பினர்) கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கி'னாராம். அவ்விதமாகத் 'தமிழகத் தைச் சீர்ப்படுத்தினர் என்பதே அச்சரிதம், என்று திரு. மு. இராகவையங்கார் கூறுவது ஆராய்ச்சிக்கு உரியது.

நச்சினார்க்கினியரின் அபிப்பிராயத்தை அப்படியே சரிதமாக ஒப்புக்கொள்ளாதவர் களும் வடக்கேயிருந்து தெற்கே வந்து குடி யேறிய மக்களும், தெற்கே யிருந்து வடக்கே போய்க் குடியேறியவர்களும் சமயக்கொள் கைகளையும் பலவேறு கருத்துக்களையும் இந் தியா எங்கும் பரப்பி வைத்தார்கள் என் பதை நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். எப் படியும் நச்சினார்க்கினியர் அபிப்பிராயத்திலே **சரிதப்புதையல்** ஒன்று காணப்படுகிறது என் பது நிச்சயம்.

கண்ணன் வழிபாடு ஆதியில் துவராபதி யிலிருந்து (துவாரகாபுரியிலிருந்து) வந்த போதிலும் தமிழகத்திலே வேரூன்றி வளர் ந்து வைஷ்ணவமாகக் கனிந்து தெற்கிலும் வடக்கிலும் மக்களைத் திருத்தி உய்விக்க லாயிற்று என்பதில் ஐயமில்லை. யமுனை தீரத் திலே தோன்றியது காவேரி தீரத்திலும் தாமிரபருணி தீரத்திலும் ஆழ்வார்கள் வாயி லாகப் புதிய உயிரும் ஒளியும் அழகும் பெற்றது.

ஆழ்வார்களுக்கு முன்னோடிகளாக வாழ் ந்து திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடியிருக்கும் சங்கப் புலவர் களும் உண்டு. இவர்களைக் குறித்து அவசிய மான சில விவரங்களை அடுத்த கட்டுரையில் வெளியிடக் கூடும்.

கோயில் அலுவல்களை மேற்பார்த்து வருகின்றனர்.

இந்தக் கோயிலைப் பற்றிய நூல்கள் பின்வருவன:—மு. கோவிந்தசாமி அய்யர்—ஸ்ரீ கற்பக விநாயகர் பதிகம், இராம. சொ. சொக்கலிங்க ஐயா-கற்பக விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி, வாடாமலர் மங்கை பதிகம், மருதீசர் பதிகம், கிருஷ்ணய்யர் - ஸ்ரீ கற்பக விநாயகர் பதிகம், சா. கணேசன் - தேசி விநாயகப் பிள்ளையார் ஒருபா ஒருபது, பிள்ளையார்ப்பட்டித் தல வரலாறு என்ற அரிய ஆராய்ச்சி நூல்.

பிள்ளையார்பட்டி கோயில் மிகப் பழைய கோயில். பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்டது. **பிள்ளையார்பட்டித்** தலவரலாறு என்ற அரிய ஆராய்ச்சி நூலை எழுதிய திரு. சா. கணேசன் அவர்கள், இக்கோயில் முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆக்கப்பட்ட குடைவரைக் (குகைக்) கோயில் என்று கருதுகின்றார்கள். இக்கோயிலில் அரசாங்கத்தாரால் படி யெடுக்கப்பெற்ற 11 கல்வெட்டுக்கள் உள்ளன. கல்வெட்டுக்களில் பிள்ளையார்பட்டி, கேரள சிங்கவள நாட்டுக் கீழ்க்குண்டாற்று மருதங்குடியான நாராயணபுரம் என்றும், திருவீங்கைக்குடி என்றும் குறிக்கப் பெறுகிறது. இறைவன் பெயர் திருவீங்கைக்குடி மகாதேவர், திருவீங்கைச் சுரமுடைய நாயனார், மருதங்குடி நாயனார் என்று காணப்படுகிறது. இறைவியின் திருநாமம் திருப்பள்ளியேறு நாச்சியார் என்று குறிக்கப் பெறுகிறது. கணபதியின் திருப்பெயர், தேசி விநாயகப் பிள்ளையார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பூசை நைமித்திகங்கள், கால சந்திகள், நந்தா (தூண்டா) விளக்குகள் இவைகளுக்காகத் தானங்கள் வழங்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.



அடிவரைக் கோயிலை ஆக்கிய நரசிம்மவர்மப் பல்லவர்.

இவை, சீவல்லபதேவர் (கி. பி. 1091—1116), விக்கிரம பாண்டிய தேவர் (கி. பி. 1180—1190), மூன்றும் குலோத்துங்க சோழன் (கி. பி.1178—1223), சுந்தரபாண்டிய தேவர் (கி. பி. 1216—1238), குலசேகர தேவர் (கி. பி. 1266—1311) முதலிய அரசர்கள் காலத்தவை. நகரத்தார் மேற்பார்வையில் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வரும் கோயில்களில் பிள்ளையார்பட்டி கோயில் ஒன்று என்பது ஈண்டு குறிக்கத் தக்கது.

எல்லாமும் நினதுசெயல் எப்பொருளும் நின
 எண்ணமே கொள்ள வேண்டும் [தென்ற
இரவுபகல் எப்பொழுதும் அம்புயம்எனத் தகுநின்
 இணையடியின் நினைவு வேண்டும்
நல்லார் உரைத்தசொல் கேட்டிடுதல் வேண்டும்
 நட்புமற வாமை வேண்டும் [அவர்
நடலைவஞ் சனையுளோர் இடத்தில்உற வாயினும்
 நாடா திருத்தல் வேண்டும்
செல்லான நாள் ஒழித்து இனியேனும் நின்புகழ்
 செப்பும்நற் புத்தி வேண்டும்
செந்தமிழ்ப் புலமைவர வேண்டும் நின்பேர்அருட்
 செல்வமும் வேண்டும் அரசே
கல்லாலின் உற்றபரன் நிகலத்து விளையாடு
 கணேசனே பிள்ளை நகரில்
கற்பாழி தனில்மேவு கற்பக விநாயகா
 கற்பனை கடந்த பொருளே.

—கிருஷ்ணய்யர்.

## செய்திகள்

திருநாட்டியத்தான்குடி ஸ்ரீ இரத்தினபுரீசுவரசுவாமி கோயிலில் சுந்தரமூர்த்திப் பெருமானார் அருளிய திருத்தலத் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழாவும், திருமுறைக்கோயில் ஆரம்பவிழாவும் 9-8-59 ஞாயிற்றுக்கிழமை, மிகச் சிறப்பாக நடைபெற்றன. அறநிலைய ஆணையர் உயர்திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திருத்தலத் திருப்பதிகக் கல்வெட்டைத் திறந்து வைத்தார்கள்.

எட்டிகுடி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகோயில் தெற்கு வீதியில் தஞ்சை டாக்டர் எஸ். டி. இராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் தந்தையார் டாக்டர் எஸ். டி. தியாகராஜ பிள்ளை அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட மனையில் யாத்ரீகர்கள் விடுதி கால்கோள்விழா அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது.

தேவூர், ஸ்ரீ தேவபுரீசுவர சுவாமி கோயிலில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுக்கள் 10-8-59 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

கீழ்வேளூர் (கேடிலியப்பர்), ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி கோயிலில், திருநாவுக்கரசு நாயனாரும், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் திருவாய்மலர்ந்தருளிய தேவார திருப்பதிகக் கல்வெட்டுக்கள் 10-8-59 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

பந்தணைநல்லூர், ஸ்ரீ பரிமளவல்லி நாயிகா உடன்கூடிய ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் 21-8-59-ல் வெள்ளிக்கிழமை ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா சம்ப்ரோட்சணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நாகப்பட்டினம் வட்டத்தில் சப்தவிடங்கத் தலத்துள் ஒன்றான திருக்காறுயில் ஸ்ரீ தியாகராஜ சுவாமி ஆலயத்தில் 9-8-59 தேதி பகல் 12 மணிக்கு அறநிலைய ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திருமுறைத் திருக்கோயிலை பிரதிஷ்டை செய்தும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற இத்தல தேவாரப் பதிகம் பொறிக்கப்பெற்ற கல்வெட்டைத் திறந்து வைத்தும், பன்னிரு திருமுறைகளின் பெருமையைப்பற்றியும், கடவுள் பக்தி. மக்கள் குலத் தொண்டின் சிறப்பைக் குறித்து, விளக்கவுரையும் ஆற்றினார்கள். அறங்காவலர் திரு முத்து கரு. அரு. கரு அருணாசலம் செட்டியார் நன்றிகூற விழா இனிது நிறைவெய்தியது.

சிதம்பரம் வட்டம், பரதூர், ஸ்ரீ அகத்தீசுவரர் கோயிலில் பன்னிரு திருமுறை இரண்டாவது ஆண்டுவிழா 17-8-59-ல் சிறப்பாக நடைபெற்றது.

# மலைநாட்டுத் திருப்பதியநுபவம்

[மகாவித்வான் திரு. P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்]

**நம்மாழ்வாருடைய திருநாவாய்ப்பதியநுபவம்:** திருநாவாயென்னும் மலைநாட்டுத் திருப்பதியைத் திருமங்கையாழ்வார் அநுபவித்தவாறு கூறினோம் முன்பு. நம்மாழ்வார் அநுபவித்தவாறு கூறுதுமிப்போது. திருநாவாய்க்கு ஒரு பதிகம் பாடினவர் நம்மாழ்வார். அது திருவாய்மொழியில் ஒன்பதாம் பத்தில் எட்டாம்பதிகமாக அமைந்தது. ''அறுக்கும் வினையாயின'' என்று தொடங்குவது அது. அதற்கு முந்தின ஏழாம்பதிகத்தில் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருமூழிக்களத்து எம்பெருமான் பக்கலில் தூதுவிட்டார்; தூது சென்றவர்கள் மீண்டு வந்து செய்தி சொல்லுமளவும் ஆறியிருக்க வேணுமே ஆழ்வார்; எங்ஙனே ஆறியிருப்பர்? திருநாவாய்ப் பதியிலே சென்றுகிட்டுவோமென்று பார்த்தார்; 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' என்னும் நிலைமையிலிருக்குமிவர்தாம் எங்ஙனே திருநாவாய்க்குச் செல்வர்? செல்லமாட்டிற்றிலர். இருந்த விடத்திலேயிருந்து மனோரதங்கள் செய்யக் குறையில்லையே. அந்த மனோரதங்களே இந்தப் பதிகமாய் வடிவெடுத்தபடி.

திருநாவாய்ப்பதி என்னருகே வந்து சேர்ந்ததாக வழியுண்டோ? நான் அங்கே புகவல்லேனோ? புகும்நாள் எதுவோ? அங்கே புக்கு என் கண்ணாரக் கண்டு அடிமை செய்யவல்லேனோ?......என்றிங்ஙனே பல பாரிப்புக்களைப் பரப்புகின்றார் இப்பதிகத்தில். ஒவ்வொரு செய்யுளையும் ஸாரமாக விவரிப்போம்.

## 1. [அறுக்கும் வினையாயின]

திருநாவாய்ப்பதி எப்படிப்பட்டதென்றால் 'வெறித்தண்மலர்ச் சோலைகள் சூழ்ந்தது' நறுமணம் மிக்குக் குளிர்ந்த பூக்கள் மலிந்த சோலைகளாலே சூழப்பட்டதென்கை. ஊரைச் சுற்றிச் சோலைகள் வளர்ந்திருப்பது தெரிந்ததே. இங்குக் கருதப்பட்ட பொருள் இது மட்டுமேயன்று. இதற்கு உள்ளுறை பொருளுண்டு; அடிவாரத்திலே வந்து சேர்ந்தவர்கட்கு நிழல் கொடுத்துத் தாபத்தைப் போக்குமவையாய்ப் பலவகைக் கனிகள் நிறைந்து தழைத்திருப்பவையான மரங்களின் திரள் சோலையெனப்படும். அதுபோல, தம் அடிவாரத்திலே ஞானமும் பத்தியும் பெறுதற்காக வந்து சேர்ந்த சீடர்களுக்கு ஸம்ஸாரதாபங்களைப் போக்கி நிழல் கொடுத்து வளர்ப்பவர்களாய், நூற்பயன்களெல்லாமுணர்ந்து விநயமே வடிவெடுத்திருப்பவர்களான ஆசிரியர்களின் திரள் மிக்கது திருநாவாய் என்கை. 'வெறித் தண்மலர்' என்று சொல்வது, சாஸ்திரங்களில் ''அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்'' என்று தொடங்கி ''ஸத்யமஷ்டவிதம் புஷ்பம்'' என்னுமளவாகச் சொல்லப்பட்ட எட்டுவகைப் புஷ்பங்களையென்க. பிறரை நலியாமை, இந்திரியங்களையடக்கியாளுதல், எல்லாவுயிர்களிடத்தும் இரக்கம், பொறுமை, ஒண்தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கின உணர்வு, தவம், தியானம், உண்மையுரை—என்னுமிவை எட்டுவகைப் பூக்களென்று பிரசித்தம். ஆழ்வார்கள் ''இனமலரெட்டுமிட்டு'' என்றும், ''கந்தமா மலரெட்டுமிட்டு'' என்றுமருளிச் செய்வது இவற்றையேயென்றுணர்க. ஆக, அஹிம்ஸை முதலான உத்தம குணசீலர்களாய், அடிபணிந்தவர்களின் தாபங்களைப் போக்குமவர்களாய், ஸகல சாஸ்த்ரார்த்தங்களையுங் கற்றுவினீதர்களாயிருக்கும் மஹான்கள் வாழுமிடம் திருநாவாய் என்றதாயிற்று. 'இப்பதி எனக்கு ஸமீபிக்கும்படியான உபாயமுண்டோ?' என்கிறார் ஈற்றடியில். 'குறுகும் வகையுண்டுகொலோ' என்ன வேண்டுமிடத்துக் குறுக்கும் வகையென்றிருப்பது எதுகையின்பம் நோக்கியென்று சிலர் நினைத்திருந்ததுண்டு.

ஸ்ரீராமாநுஜர் மலைநாட்டுத் திருப்பதியாத் திரையாக எழுந்தருளுகையில் திருநாவாய் ஸமீபத்திலே யெழுந்தருளும்போது எதிரே வந்து கொண்டிருந்த மலையாளர்களை நோக்கி, 'திருநாவாய் எவ்வளவு தூரமுண்டு' என்று கேட்க; அவர்கள் 'குறுக்கும்' என்றார்களாம்; தமிழ்ப் பாஷையில் குறுகுமென்பது மலையாள பாஷையில் குறுக்குமென்று கிடக்கிறது; ஸமீபத்தில்தானுள்ளது என்று பொருள். இராமாநுஜர் அதுகேட்டு 'ஆழ்வார்க்கு மலைநாட்டுத் திருப்பதியநுபவம் நிகழ்கையில் மலைநாட்டுப் பாஷையும் தன்னிடையே கூடிற்றே!' என்று ஈடுபட்டாராம்.

## 2. [வடிவேல் தடங்கண் மடப்பின்னை மணாளன்]

விருப்பம் சடக்கெனக் கைகூடுதற்காகப் பிராட்டியைப் புருஷகாரமாகக் கொள்ளுகிறாராழ்வார். கிருஷ்ணாவதாரத்தில் ருக்மிணிப் பிராட்டியும் ஸத்தியபாமைப் பிராட்டியும் தேவிமாரானது துவாரகாபுரியிற் சேர்ந்த பிறகு. கண்ணன் திருவாய்ப்பாடியிலெழுந்தருளியிருந்த காலத்து "தக்கார் பலர் தேவிமார் சாலவுடையீர்" என்று திருமங்கை மன்னன் பணித்தபடி ஆயர்மங்கையர் அனைவரும் தேவிமார்களாயிருக்கவும் நப்பின்னைப் பிராட்டி விதியினால் மணக்கப்பட்ட தேவியாவள். எசோதையின் உடன்பிறந்தவரான கும்பரென்னும் கோபாலருடைய மனையில் நீளாதேவி ஆய்ப்பெண்ணாக அவதரித்திருந்தனள். திரேதாயுகத்தில் மிதிலாபுரித் தலைவனான ஜனகராஜன் தனது திருமகளாருடைய மணத்திற்கு வில்முறியை சுல்கமாக வைத்திருந்ததுபோல இக்கும்பர் தமது திருமகளின் திருமணத்திற்கு எருதேழடர்த்தலை சுல்கமாக வைத்திருந்தனர். ஒருவர்க்கும் அணுகவுமொண்ணாதிருந்த அவ்வேழெருதுகளையும் கண்ணபிரான் அவலீலையாகத் தழுவி வலியடக்கி அவளை மணம் புணர்ந்துகொண்டனனென்று ஹரிவம்சம் கூறும். இவளுக்குப் பின்னையென்றும் நப்பின்னையென்றும் பெயர் வழங்கும். ஸ்ரீமஹாலக்ஷ்மிக்குப் பிற்பட்டவளென்று பெயர். திருநாவாய் அணுகப் பெறுவதற்கு இப்பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றினாராயிற்று.

## 3. [நவையில் திருநாரணன் சேர்திருநாவாய்]

நவை என்று குற்றத்திற்குப் பெயர். குற்றமற்ற நாராயணன் வாழுமிடமான திருநாவாயென்றபடி. அகில ஹேயப்ரத்யநீகனென்று மறைமுடிகளில் ஓதப்படுகின்ற எம்பெருமான் இயற்கையாகவே குற்றமற்றவனாயினும் அதனை இங்குச் சொன்னதற்கு ஒரு விசேஷமான கருத்துண்டு; கீழ்ப்பாட்டில் "வடிவேல் தடங்கண் மடப்பின்னை மணாளன்" என்று கூறி, மேற்பாட்டிலும் "வாளேய் தடங்கண் மடப்பின்னை மணாளா!" என்று கூறியிருத்தலால் பிராட்டி புருஷகாரமாவதற்கு முன்னே பெருமானுக்குச் சில குற்றங்களுண்டாகிப் பிறகு அவை கழிந்தனவாம். நம் போன்ற ஸம்ஸாரிகள் அணுகுமளவில் அவர்களது குறைகள் பலவற்றையுங்கண்டு பொறுமையற்று இரக்கமற்று வாற்சல்யமற்றுச் சீறுகை அவன்றனக்குக் குற்றமாகும்; அது நீங்கப் பெறுவது பிராட்டியின் புருஷகாரத்தினாலென்ப. "புருஷகார பலத்தாலே ஸ்வாதந்திரியம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம்" என்ற பிள்ளையுலகாசிரியரருளிச்செயல் ஈண்டு நினைக்கத்தக்கது.

## 4. மீளாவடிமைப் பணி செய்யப் புகுந்தேன்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் கைங்கரியமே பரமபுருஷார்த்தமும். திருநாட்டில் பெறும் பேறும் கைங்கரியமே; அதற்கு உறுப்பாக இங்கு அனுட்டிக்க வேண்டும் உபாயமும் கைங்கரியமே. திருநாட்டில் செய்யும் கைங்கரியத்திற்கு மீளாவடிமை யென்று பெயர். அஃது இடையறாது செய்யும் பணிவிடையாதல் மீளாவடிமை யெனப்பட்டது. அவ்வடிமை ஸித்திப்பதற்காகத் திருநாவாயில் சென்று அடிமை செய்ய விருப்புற்றிருத்தலைத் தெரிவித்தவாறு.

## 5. [மணாளன் மலர்மங்கைக்கும் மண் மடந்தைக்கும்]

கீழிரண்டு பாட்டுக்களில் நப்பின்னைப் பிராட்டியின் புருஷகாரத்தை மட்டும் பேணினர் ஆழ்வார். இப்பாட்டில் ஸ்ரீதேவி பூமி தேவியாகிய இருவருடையவும் புருஷகாரத்தைப் பேணுகிறார். கமலச் செல்வி புருஷகாரத்திலே ஊன்றியிருப்பள்; நிலமகள்

பொறுமை தானே வடிவெடுத்தவளாயிருப்பள்; இத்தகைய இருவரும் அருகேயிருக்க, நான் இழக்கத் தகுமோ வென்கிறார்.

[6. கண்டே களிக்கின்றது இங்கென்று கொல்கண்கள்]

அடிமை செய்வது எப்படி புருஷார்த்தமோ, அப்படியே காண்கையும் புருஷார்த்தம். "கண்ணாரக் கண்டுகழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே" என்றார் இவ்வாழ்வார் தாமே. வடமொழி நூல்களும் "தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" என்றும் "ஏததேவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி" என்றும் கூறியவை காண்க. தம் கண்களின் விடாய்தீரத் திருநாவாயைக் கண்டு அனுபவிக்கப் பெறுவது என்றைக்கோ வென்கிறார். 'என் பசி தீராவிடினும் என் கண்களின் பசி தீர்ந்தால் போதுமே' என்கிறார். உலகில் யாசகம் செய்பவர்கள் 'என் பசி கிடக்கட்டும்; என் குழந்தை படுகிறபாடு பாருங்கள்; அதன் பசியை முன்னம் தீர்த்தல் நன்று' என்பர்களே; அங்ஙனே சொல்லுகிறபடி.

[7. ஆவாவடியானிவ னென்றருளாயே]

வடமொழியில் ஹா! ஹா! என்னுமிரண்டு இடைச்சொற்கள் தமிழில் ஆவாவெனத் திரியும். ஐயோ ஐயோ என்பது பொருள். உலகில் துக்கப்பட்டவர்களது வாக்கில்தான் ஐயோவென்று வரும். பகவானது திருக்குணங்களில் 'தயா' என்னுங் குணத்திற்கு பிறர்படும் துக்கத்தைக் கண்டு தானும் துக்கித்தல் என்று பொருள் கூறுவர் பேராசிரியர். பிறர் படும் துக்கத்தைப் போக்கவல்ல ஆற்றல்படைத்த பரமனுக்கு துக்கம் எப்படி யுண்டாகுமென்பர் ஒரு சாரார். இனிமேல் துக்கப்பட வேண்டாதபடி செய்திட்டாலும் பட்ட துக்கத்திற்கு ப்பரிஹாரமில்லாமையாலே அதற்காகத் துக்கிப்பவனே தயாளுவான பகவான். அதனால் ஹாஹா வென்று இரக்க முறுவன். அந்தத் திருக்குணத்தை யநுசந்தித்தவாறு.

[8. அடியேனைப் பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய்]

"பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமை கொண்டாய்" என்றும் அநுசந்தித்தவர் இவ்வாழ்வார். நமக்கு ப்ரக்ருதியோடும் ஸம்பந்தமுண்டு, பரம புருஷனோடும் ஸம்பந்தமுண்டு. ப்ரக்ருதி ஸம்பந்தம் நம்மை உருவழிக்கும்; பரமபுருஷ ஸம்பந்தம் நம்மை வாழ்விக்கும். கிட்டமென்கிற ஒரு மண்கட்டியானது தன்னோடு சேர்ந்த மாணிக்கத்தை ஒளியைத் தின்று உருவழித்துத் தன்னைப் போலே யாக்கும். அதை யொத்தது ப்ரக்ருதி ஸம்பந்தம். வேட்டுவேளானென்கிற குளவியானது ஏதேனுமொரு புழுவைக் கொண்டு வைத்து ஊதித் தன்னோடொத்ததாம்படி பண்ணிவிடும். அது போல, ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே அவஸ்துவாய்க் கிடக்கும் இவ்வான்மாவைத் தன்னிறமாகவூதி வாழ்விக்கும் பரமபுருஷ ஸம்பந்தம். ஆசார்ய ஹ்ருதயத்தில் "இவை கிட்டமும் வேட்டுவேளானும் போலே...... ஹானிஸத்தைகளை யுண்டாக்கும்" என்றுள்ள (கக) சூரணை இங்கு நினைக்கத்தக்கது.

[9. தேவர் முனிவர்க்கென்றும் காண்டற்கு அரியன்]

"கட்கரிய பிரமன் சிவனிந்திர னென்றிவர்க்கும் கட்கரிய கண்ணன்" என்றார் கீழும். பிரமன் முதலிய தேவர்களுக்கும், ஸநக ஸநந்தநாதிகளான யோகிகளுக்குங்கூடத் தாமாகக் காண நினைக்கில் காணவரியனாயிருப்பன் எம்பெருமான். அப்பெருமான் தானே தன்னைக் காட்டிக் கொடுத்தால் காணலாமத்தனையொழிய, தமது முயற்சியாலே காணப்புகுமவர்களுக்குக் காணக் கிடையாதவனென்க.

" அந்தோ! அணுகப்
பெறுநாள் என்றெப்போதும்
சிந்தை கலங்கித்
திருமாலென்றழைப்பன்
கொந்தார் மலர்ச்
சோலைகள்சூழ் திருநாவாய்
வந்தே யுறைகின்ற
எம்மாமணி வண்ணா."


திருநாவாயுறையும் தேவே!, உன்னைக் காணப்பெறாமையாலே நெஞ்சழிந்து கூப்பிடா நின்றேன் காண் என்கிறார். இதில் 'சிந்தை கலங்கித் திருமாலென்றழைப்பன்'

என்றது இன்சுவை மிக்க பாசுரம். 'அத் தலைக்குத் திருவுள்ளமில்லையாகில் நாம் அழைப்பதனால் என்னாகும்?' என்று தெளிவு பெற்று ஓய்ந்திருக்க வேணுமே நான்; அந்தத் தெளிவில்லாமல் சிந்தை கலங்கிக் கிடக்கிறே னாதலால் மேன்மேலும் திருமாலே யென் றழைக்கின்றேனென்கிறார். ஆர்த்திமிகுந்த குழந்தை ஆர்த்தியின் கனத்தாலே தாய் தந்தையரைக் கூப்பிடுமா போலே திருமாலே! என்று திவ்ய தம்பதிகளைக் கூப்பிடுகிறார்.


**10. [திருநாவாய் வந்தே யுறைகின்ற எம்மாமணி வண்ணா!]**

திருநாட்டிலே வந்து காணக்கடவதான வடிவை இங்கே காட்டுவதாகக் கொண்டு திருநாவாயிலே வந்திருந்தும் காட்டா திருப் பது தகுதியோ வென்று உள்ளுறை, திரு நாவாய்ப் பதியனுபவம் முற்றிற்று.

திருமூழிக்களத்தின் அநுபவம் அடுத்த இதழில் வெளிவரும்.



பெருஞ்சேரி வாகீசுவர சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம்
[12-7-59 ல் நடைபெற்றது.]



திருக்கோஷ்டியூர் அஷ்டாங்கவிமானம், கோபுரம், புஷ்கரணி.

# — திருக்கோஷ்டியூர் —

[பேராசிரியர் பண்டித திரு. தி. இராமாநுசன், வித்வான்]

குற்றமின்றிக் குணம்பெருக்கிக்
குருக்களுக்க நுகூலராய்
செற்றமொன்று மிலாதவண் கையினர்கள்
வாழ்திருக் கோட்டியூர்
துற்றியேழுல குண்ட தூமணி வண்ணன்
தன்னைத் தொழாதவர்
பெற்றதாயர் வயிற்றினைப் பெருநோய்
செய்வான் பிறந்தார்களே.

—பெரியாழ்வார்.

"இருப்பிடம் வைகுந்தம்" என்கிற படியே, 'ஸ்ரீயப்பதியான சர்வேஸ்வரனுக்கு' நிலையான இருப்பு ஸ்ரீ வைகுண்டமே ஆகும். 'பக்தரக்ஷகனன' அவன் அடியார்களைக் கட்டிக்காக்கும் பொருட்டு, அதை விடுத்து இந் நிலவுலகிலுள்ள கோயில்கள் தோறும் "அர்ச்சாரூபியாய்" எழுந்தருளியுள்ளான் என்பர். அங்ஙனம், உள்ள திருமால் திருப்பதிகளுள், "கோட்டியூர் அரங்கம் மெய்யம்" என்று, முதலில் வைத்து எண்ணத்தக்க பெருமை பெற்றது திருக்கோட்டியூர்.

இது, பாண்டிய நாட்டு 'வைஷ்ணவ திவ்ய தேசங்களுள்' ஒன்று. திருப்புத்தூரில் இருந்து சிவகங்கை வரும் சாலை வழியில் உள்ளது. இங்கிருந்து சிவகங்கை 16 மைல் தூரத்திலுள்ளது. சுற்று முற்றிலும்—ஏரியூர் மலை: திருமலை: குன்றக்குடிமலை: அழகர் மலை என்ற பல மலைகளைக் கொண்டது. நல்ல நீர்வளம் நிலவளம் பெற்றது. தெற்கே ஒன்றரைக்கல் தொலைவில் மணி முத்தாறு ஓடுகிறது. சிவகங்கை தேவஸ்தானத்தாரின் வழிப்போக்கர் விடுதி உண்டு. தங்குவதற்கு எல்லா வசதிகளும் தரும். கிளையஞ்சல் நிலையம்; பாடசாலை: மருத்துவ இல்லம்: யாவும் உடையது. ஏறத்தாழ இரண்டாயிரத்



இரணய சமமாரம

துக்கும் அதிகமான மக்களைக் குடியிருப்பாக உடைய ஒரு சிற்றூர். கோட்டியூர்க் கலம் பகம்: பிள்ளைத்தமிழ் முதலிய இலக்கியங்க ளால் புகழ் பெற்றது. உடையவர் திருமந்தி ரப் பொருளை எல்லோருக்கும் ஒக்க உபதே சித்தருளிய திவ்ய தேசம்- என்ற முறையில் இவ்வூருக்குப் பெருமதிப்பு. நாற்புறங்களில் இருந்தும், மக்கள் நாளும் கூட்டங்கூட்டமாக வந்து வழிபட்டுப்போவர். ''வண்மையினுர் கள் வாழ்திருக்கோட்டியூர்'' என்றபடியே, தயையும் கொடையும் நிறைந்த 'உத்தமசீலர் கள்' இருப்பிடம். மக்கள் மனம் கவரும் மாத வன் கோயிலைத் தன்னகத்தே கொண்டு சிறப்பது.

'திருகு' என்ருல் மாறுபாடு. மாறு படுத்தி நம்மைப் பிறவியிலே அழுத்தும் பாவங்களை—''திருக்கு'' என்பர். செய்த பாவம் செய்கின்ற பாவம் எல்லாம் இறை வன் திருவருளால் நீங்கும். இப்படிப் பாப நாசஞன ஈஸ்வரனை ''திருக்கு ஓட்டி'' என் பது அமையும். அவன் கோயில் கொண்டு உள்ள ''திவ்ய ஸ்தலம்'' ''திருக்கோட்டியூர்'' எனப்பட்டது. 'கோட்டம்' என்ருல் கோயிலை உணர்த்தும். முருகன் கோயிலை, ''சேவலங் கொடியோன் கோட்டம்'' என்பது சிலப்பதி காரம். ஆகவே, கோயில் உள்ள ஊர்—''கோயிலூர்'' என வழங்கும் வழக்குப்போல கோட்டம் (கோயிலைப்) பெற்றவூர் ''கோட் டியூர்'' எனப் பெயர் சிறந்தது எனலும் அமையும். இனி, 'கோட்டி' என்பது அறி ஞர் கூட்டத்தினை உணர்த்தும் சொல்லுமாம். ''நிரம்பிய நூல் இன்றிக் கோட்டிகொளல்'' திருக்குறள். ''திருமால்: நான்முகன்: இந்தி ரன்: உருத்திரன் முதலிய யாவரும், 'இரணிய சம்ஹாரத்தின்' பொருட்டு தனித்திருந்து ஆராயக் கூட்டம் கூடிய கோட்டம் இது''— என்று இவ்வூர்த்தலபுராணம் செப்பும். தேவர்கள் இங்ஙனம் கூடிய இடமாகிய கோட்டம் ''கோட்டியூர்'' எனவும் படலாம். கோட்டபுரம்—திருக்கோஷ்டியூர், எனவும் இது வழக்குப் பெறும். இன்தமிழ் பாடும் புலவர் பலருக்கும் இது இருப்பிடம்.

வைணவ சமய பரமாசாரியரான ஸ்ரீ ராமாநுசரின் காலம் சுமார் எண்ணூறு ஆண்டுகட்கு முன் என்பர். இவருக்கு நெடுங் காலத்திற்கு முன்னரே, இவ்வூரும் கோயி லும் இருந்தனவாதல்வேண்டும். காலப் பழைமையைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் பல இவ்வூர்க் கோயிலில் உள்ளன. எழுபத் தைந்து ஆண்டுகட்கு முன்னர் இவ்வூர்த் தல புராணம் எழுந்தது. இவ்வூரில் எழுந்தரு ளிய ''திருக்கோட்டியூர் நம்பிகள்''—என்பார் உலகப் புகழாளர். ''செல்வ நம்பிகள்'' என் பது இவரது திருப்பெயர். ''செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப் பழ வடியேன்''—என்று திருமாலுக்கு உகந்த பழவடியாராக இவர் புகழப்பெறுவர். வைணவகுல திலகரான இராமானுசர் இவ ரிடமே பதினெட்டு முறை தேடி வந்து, இறு தியில் திருமந்திரார்த்தத்தை உபதேசிக்கப் பெற்றனர் என்பர். பெரியாழ்வார்: பூதத் தாழ்வார்: பேயாழ்வார்: திருமழிசையாழ்வார்: திருமங்கை ஆழ்வார்—ஆகிய ஐந்து ஆழ்வார் களும் தங்கள் தங்கள் பாடல்களில், இவ் வூரைப் பாடியிருக்கிருர்கள். திவ்யகவி பிள் ளைப் பெருமாள் ஐயங்காரும் ''அஷ்டப் பிர பந்தம்'' என்ற தம் நூலில் இவ்வூரைப் பாடி யுள்ளார். இப்பாடல்களின்மூலம் இவ் வூரைப்பற்றிய பழம் பெருமைகளை நன்கு உணரலாம். ''வண்ணமாடங்கள் சூழ்திருக்

கோட்டியூர்''—''செந்நெல்லார் வயல் சூழ் திருக்கோட்டியூர்''-''வேதம் பயின்றவர் வாழ் திருக்கோட்டியூர்''—வண்கையினுர்கள் வாழ் திருக்கோட்டியூர்''—''செங்கண்மால் திருக் கோட்டியூர்''—''தேச வார்த்தை படைக்கும் திருக்கோட்டியூர்'' என்பன, எல்லாம் இவ் வூரின் புகழ்ப் பாசுரங்கள்.

''மால் உறைகின்றது இங்கு என்னத் தேவர் வந்திறைஞ்சும் திருக்கோட்டியூர்''—என்று, திருமங்கைமன்னர், இவ்வூர்க்குப் பெருமையாகத் ''திருமால் உறையும் திருக் கோயிலே''யே சுட்டுவர். ''திருக்கோட்டியூர்த் திருமாலவன் நாமங்களை எண்ணக் கண்ட விரல்கள்'' என்று, அவன் பெயரோதி எண்ணுவதே பெரும் சிறப்பு என்பர் பெரியாழ்வார். கோட்டியூர் எம்மானை நினையாத மக்களைப் ''பூமி பாரங்கள்'' என்றே அவர் பேசுவர். கோட்டியூர் முதல்வனைச் சிந்தியாத ''பாவகாரிகள்-பெற்ற தாய் வயிற்றில் பெரு நோய் செய்வான் பிறந்தார்கள்'' என ஏசுவர். திருக்கோட்டியூர்,

''நாதனை: நரசிங்கனை: நவின்றேத்துவார்கள் உழக்கிய பாததூளி, படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே''—

என்ற பாசுரத்தால் ''உலகுக்குப் புகழளித்த பேரூர்'' இது, என நாம் உணரலாம். இவ்வெல்லாப் பெருமையும் ''இவ்வூருக்குக் கோயிலாலே வந்தது'' ஆகும்.

இவ்வூரின், நடுவே கோயில் உள்ளது. நெடுந்தூரம் வரை தெரியக் கூடியது திருக் கோபுரம். அஷ்டாங்க விமானம் உள்ளது. கோயிலின் கீழ் மேல் அடி நீளம் 472 அடி. தென் வடல் அகலம் 270 அடி. எண்பத்தைந்தடி உயரத்தில் ஒரு அரசகோபுரம் தலைவாயிலில் உண்டு. 'அஷ்டாங்க விமானமே' இக்கோயிலுக்குத் தனிச் சிறப்பு. இதன் உயரம் தொண்ணூற்றூறு அடி. உச்சியில் தங்கக் கலசம் கொண்டது. இவ்விமான நிழல் எப்போதுமே தரையில் விழாது. தஞ்சைக் கோபுர அமைப்புப் போல இவ்விமானத்தில் இது ஒரு புதுமை. மூலைக்கு இரண்டாக நான்கு மூலைகட்கும் எட்டு விமானங்கள் அமைந்துள்ளன. எட்டு விமானங்களும் திருமாலின் பெயராகிய ''அஷ்டாக்ஷரத்தைக்' குறிக்கும். நடுவிலே அமைந்த உச்சி 'பிரணவம்' போலிருக்கும். இப்படி 'திருமந்திரார்த்த தத்துவத்தை' உட்கொண்டது இது என்பர். மேல் தளத்தில் எட்டுத் திசைகளிலும் திசைக்கொன்ருக எட்டு விமானங்கள் உண்டு. இந்த விமானம் ஒன்றின்மேல் ஒன்ருக மூன்று மாடிகளை உடையது.



இரண்ய யுத்தம்

மேல்தளம் 'பரமபதம்' என்று தொழப் பெறும். இதுவே ஸ்ரீவைகுண்டம். இங்கே எழுந்தருளியிருப்பவர் 'பரமபத நாதன்'. இரு புறமும் 'ஸ்ரீதேவி: பூதேவி'கள் உள்ளனர். பெருமாள் இருந்த திருக்கோலத்தோடு காட்சி தருவர். முப்புறமும், சுவரில் சித்திரங்கள் தீட்டப் பெற்றுள்ளன, அவைகள்—நித்திய சூரிகள்; முத்தியடைந்தவர்கள்: ஆழ்வாராதியர்கள்: தேவமுனிவர்கள் முதலியோரின் திருவுருவங்கள். முன்வாசல் நுழைவில் மேல் சித்திரம்- ''இவ்வூரில் இறந்தவர் அடையும்'' பேற்றினைச் சுட்டுவதாகத் தெரிகிறது. இறந்தவர்களைத் தேவர்கள் விமானத்தில் அழைத்துப் போவதும்-விரசா நதியில் மூழ்கச் செய்வதும்: மூழ்கிய பின் பரமபத நாதன் உருவத்தை அடைவதும்: பின் பரமபத வாசிகள் அழைத்துப் போய் கோபுரவாசலில் விடுவதும்: வாயிலில் நுழைந்தவுடன்

மதிமுக மடந்தையர் ஐயாயிரவர் பணிவிடை செய்வதும்: அடுத்து திருமாமணி மண்டபத்து அந்தமில் அழகுடன் நாளோலக்கம் காணுவதும்—இறுதியில் பரமபத நாதனுடன் சாரூப நிலைபெறுவதுமாகிய பேறுகளை தத்ரூபமாகச் சித்தரிக்கின்றன. மேல் தளத்தில், உட்சுற்று: வெளிச் சுற்று என இரண்டு உண்டு. தெற்கு வெளிச் சுற்றில் நடுவே—தெற்கே பார்த்து, உடையவர், உபதேச முத்திரையுடன் 'திருமந்தி ரார்த்தம் உபதேசம்' செய்த பாவனையில் எழுந்தருளியிருக்கிறார்.

இனி, அடுத்த நடுத்தளத்தில்-சீதேவி பூதேவிகளோடு-பெருமாள் "நின்ற கோலத்தில்" காட்சியளிக்கிறார். இது 'இந்திர லோகம்' என்று ஐதிகம், பெருமாளுக்கு 'நின்ற நம்பி: உபேந்திரன்': என்று பெயர்கள். முனிவர்: தேவர்கள்: சித்திரங்கள் இங்குமுண்டு. இது, உட்சுற்று வெளிச் சுற்றுச் சுவர்களோடும் நான்கு புறவாசல்களோடும் விளங்குகிறது. இங்கே அஷ்டாங்க விமானத்தில் 'உட்கூடு' தெரியும்.

முதல் தளத்தில் இருக்கும் பெருமான், திருப்பாற்கடல் நாதன். இவரே இக்கோயிலுக்கு மூலவர். திருப்பாற்கடலில் பள்ளி கொண்டருளிய திருக்கோலம். இவரையே "உரகமெல் அணையான்" என்று பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்திருக்கிறார். 'பன்னக மிருதுதர்பசாயீ' - என்று வடமொழியில் இவரது திருநாமம். பள்ளிகொண்டுள்ள பாற்கடல், வெள்ளை நிறம். படுக்கைப் பாயலாய் இருக்கும் ஐந்தலை யரவு தங்க நிறம். பள்ளிகொண்ட பெருமான் நீலமேனியினர். மூலவர்: திருவிழா நாயகர் (உற்சவர்): திருமஞ்சனமூர்த்தி: நித்தியோற்சவர்: யாக பேரர்-என்ற 'பஞ்சமூர்த்திகள்' இத்தலத்திலுண்டு. மூலவர் "உரகமெல்லணையான்"-என்ற திருப்பாற்கடல் நாதன். உற்சவர் மாதவன் என்கிற சௌம்யநாராயணப் பெருமாள். 'வெள்ளியான் கரியான்' என்றும் - திருமாமகட்கு இனியான், நிலமாமகட்கினியான், குலமாமகட்கினியான் — என்றும் இவர் ஆழ்வார்களால் பாடல் பெற்றவர். திருமங்கையாழ்வார், நாடோறும் திருமஞ்சனமாகும் 'மஞ்சனமூர்த்தியை'—'தேவதேவபிரான்' என்று பாடியுள்ளார். நித்தியோற்சவர் என்பது பலிபேரரை. "குளிர்ந்துறைகின்ற கோவிந்தன்" என்பர் பெரியாழ்வார். யாகபேரர் என்பவர் வேள்விமூர்த்தி. 'நரகநாசன்' என்று இவருக்குப் பாசுரம். காளிங்க நடனகிருஷ்ணனும், ஊஞ்சலில் சந்தான கிருஷ்ணனும், இப்பஞ்ச பேரருடன் எழுந்தருளியுள்ளார்,

விமான அடிவாரத்தின் — கிழக்கே கண்ணன் திருவுருவம், தெற்கே நரசிங்க மூர்த்தி, வடக்கே இராமபிரான் திருக்கோயில் உள்ளன. நரசிங்கர் சந்நிதியில் வைத்துத்தான் திருக்கோட்டியூர் நம்பிகள், இராமாநுசருக்கு திருமந்திரத்தை உபதேசித்தது. இராமாநுசர். 'எவரிடமும் சொல்லுவதில்லை' என்ற உறுதி தந்து நம்பிகளிடம் உபதேசம் பெற்றார். நரசிங்கர் மீது ஆணையுமிட்டார். பின், அவர் நினைத்தார்—"நாம் பெற்றதோ கேட்ட வேளையிலே எவரையும் கரையேற்றும் எட்டெழுத்து மந்திரம். கேட்ட எவருமே முக்தி பெறுவர் என்றால், எல்லாரும் "கேட்க" நாம் சொன்னால் என்ன? உறுதி மீறின பாவத்தால் நரகு வரும். நமக்கு நரகு வந்தால் அனைவரும் நலம் உறுவர் அல்லவா? சொல்லியே திருவோம் என்று, அப்படியே, கொட்டி முழக்கி எல்லோரையும் கூட்டினார். கூடிய யாவருக்கும் தேடிய நிதியை வழங்கினார். "நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணா என்று, கூறும் மனமுடைய பத்தர் எல்லோரையும் திருவருள் பெற வருமாறு கூறினார். அவரும் அதனால் "வள்ளல் இராமாநுசன்" என்று பெயர் பெற்றார். இப்படி, 'வண்மையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்' இராமாநுசனை வள்ளலாக்கிய வரலாறும், அதனை உணர்த்தும் திருவுருவமும் நமக்கு உள்ளும் தோறும் இன்பம் அளிக்கவல்லது.

விமானத்திற்குத் தெற்கே தாயார் சந்நிதி, வடக்கே ஆண்டாள் சந்நிதி, சுவர்க்க வாசல், இவை உள்ளன. யாகசாலையும் சேனைமுதலியார் சந்நிதியும் வடகிழக்கே உள்ளன. கோயிலில்—சோற்றறை, வாகன அறை, மடைப்பள்ளி முதலியனவும் உண்டு. இங்கு, சரபேசுரமூர்த்தி கோயிலும் உண்டு. இதற்கு கர்ப்பக்கிரகம், மணிமண்டபம், அர்த்தமண்டபம் எல்லாம் உண்டு. நந்தியும், பிள்ளையாரும் உள்ளனர். இந்நிலையில் சைவ வைணவ ஒற்றுமைக்கு நிலைக்களனாகவும் இவ்வூர்க் கோயில் இலங்குகிறது.

தேர், திருவிழா, தெப்பம் எல்லாமும் உண்டு. ஏறத்தாழ பன்னிரண்டு மாதமும் திருவிழாக்கள் நடைபெறும். வைகாசியில் 'கஜேந்திர மோக்ஷம்'. வைகாசி ரோகிணியில் நம்பிகளுக்கு பத்து நாள் விழா. ஆடி மாதம் ஆண்டாளுக்குத் திருவாடிப் பூரத்தில் தேர். புரட்டாசியில் நவராத்திரி. ஐப்பசியில் ஊஞ்சல் விழா. மார்கழியில் பகல் பத்து, இராப் பத்து, திருவத்தியயன உற்சவம். தினமும் ஆறுகால பூஜை. நாள்தோறும் திருமஞ்சனம். தவிர மாதந்தோறும் தேவபிரானுக்கு இரண்டு ஏகாதசிகள், அமாவாசை, சித்திரை நாள், மாதப் பிறப்பு ஆகிய, பஞ்ச பருவங்களிலும் நீராட்டம். இவை விழா நிகழ்ச்சி. மணிமுத்தாற்றில் ஆண்டுதோறும் "தீர்த்த வாரி" நடைபெறும். திருக்கோஷ்டியூர் தெப்பம் இப்பகுதிகளில் பேர் போனது. கோயிலின் முன்பு திருப்பாற்கடல், வடகிழக்கில் நடுமண்டபத்தோடு கூடிய தெப்பக்குளம், தென்மேற்கில் ஐயனூர் சிவகங்கை, வடக்கே வடதிருப்பாற்கடல், காவடிக்குளம் என்ற தீர்த்தச் சிறப்புக்களும் உள்ளன. இக் கோயில் நிருவாகம்-வழிவழியாய்த் தெய்வ பக்தியில் சிறந்துவரும் சிவகங்கை மன்னர்களால் நன்கு நடைபெற்று வருகிறது. அவர்களே பரம்பரைத் 'தருமகர்த்தாக்கள்' ஆவர். மெய்யன்பர்கள் பலரால் ஏற்று நடத்தல் பெறும் திருப்பணிகளும், விழாக்களும் குறைவில்லை. எல்லாக் கோயில்களிலும் போலவே, இதிலும் சிறப்புச் சிறப்புக்கள் மிகுதி. நரசிங்க மூர்த்தியின் சண்டைக்கோலம், இரணிய வதை, இரண்டும் அரிய வேலைப்பாடுடையவை. அட்டாங்க விமானமும், முத்தளத்து அரிய சித்திரங்களும், காட்சிக்கு இனியன. சிங்கம் சுமந்த கொடுங்கைகளோடு கூடிய மிகப் பழைய கோயில் இது. தங்கமுலாம் பூசிய கருடன், குதிரை ஆகிய வாகனங்கள்; தங்கம், வெள்ளியில், தோளுக்கினியான், தந்தத்தினால் பல்லக்கு, மரத்தால் யானை, அன்னம், சிங்கம், ஆதிசேடன், பல்லக்குகள் முதலியவை எல்லாம் உண்டு. கோயில் நடைமுறைக்கு மானிய நிலங்கள் சொத்துக்கள்—யாவும் உள்ளன.

நான்முகனிடம் நாரதன் இவ்வூர்ப் பெருமை கேட்டதாகப் புராணம் கூறும். இரணிய வதத்திற்காகத் தேவர்கள் யாவரும் இங்கு கூடிக் கருதினமை ஊர்ப் பெயராலேயே தெரியும். 'இரணிய சம்ஹாரம் நடந்த இடமும் இதுவே என்பது தலபுராணம். கதம்ப முனிவர் இருந்து பூசித்து முத்தி பெற்ற தலம். நான்முகன் ஏவலால் மயனும், விசுவகர்மாவினாலும் இவ்வூர் விமானம் அமைந்தது. இந்திரன், கதம்ப வனமான இவ்வூரில் பண்டு வந்து, சித்திரைமாதச் சித்திரை நாளில் தேரோட்டம் நடத்தி, ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவியுடன் கூடிய சௌமிய நாராயணனை, கதம்ப முனிவரிடம் ஒப்படைத்தான் என்பது மூர்த்தி விசேஷம்.

இங்ஙனம், தலம், தீர்த்தம், மூர்த்தி என்றவற்றாலுள்ள பழம் பெருமை மட்டுமில்லை; சைவ வைணவ ஒற்றுமைக்கு நிலைக்களனாகவும் "எல்லாரும் இன்புற்றிருப்பது தவிர வேறு ஒன்றறியாத" சமயவள்ளன்மையாகிய நயந்த சீலத்துக்கு எடுத்துக் காட்டாகவும் உள்ள இத்திவ்ய தேசம் பண்டு போல், இன்றும் "நல்ல உணர்வூற்றாக இருந்து மக்கட்கு வழிகாட்டும்" பெருநாடாகும். போற்றிப் பயன் பெறுவது தலையாய மக்கள் கடன்.

தாரேன்பிறர்க் குன்னருளென் னிடைவைத்தாய்
ஆரேனதுவே பருகிக் களிக்கின்றேன்
காரேய் கடலே மலையே திருக்கோட்டி
யூரே உகந்தாயை யுகந்தடியேனே

—திருமங்கையாழ்வார்

வான்பார்க்கும் பைங்கூழ்போல்
  வாளா உனது அருளே
யான்பார்க்க நீ பார்த்து
  இரங்கிநாய்—தேன் பார்ப்பின்
ஓசைத் திருக்கோட்டியூரானே
  இன்னமும் என்
ஆசைத்திருக்கு
  ஒட்டி ஆள்.

—திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

ஸ்ரீ வில்லிபுத்தூர், ஸ்ரீ நாச்சியார் கோயிலில் ஸ்ரீ ஆண்டாள் திருஆடிப்பூர மகோத்சவம் 28-7-59 முதல் 7-8-59 முடிய சிறப்பாக நடைபெற்றது.

# அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள் திருவாரூர் முகாமில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 7-8-59 | (1) தூவாய நாதர் கோயில் பரவையுண் மண்டளி | தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா. |
| ,, | (2) அரநெறியப்பர் கோயில், திருவாரூர் அரநெறி. | தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா-திருமுறைக் கோயில் பிரதிஷ்டை விழா. |
| ,, | (3) முக்கோண நதீசுவரர் கோயில், பள்ளியின் முக்கூடல். | தேவாரக் கல்வெட்டுத் திறப்புவிழா. |
| ,, | (4) பதஞ்சலி மனோகரர் கோயில், திரு விளமர். | ,, |
| ,, | (5) ஸ்ரீ பார்வதீஸ்வரர் கோயில், இஞ்சிகுடி. | வெள்ளி நாகபாரணம் அணிவித்தல் விழா. |
| 8-8-59 | (6) ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர். | இருபத்தேழு நாயன்மார்களின் பிரதிஷ்டை விழா. |
| ,, | ஸ்ரீ பக்தவத்சல பெருமாள் கோயில், திருக்கண்ணன்குடி. | பாசுரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| 9-8-59 | (8) ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில், திருக்காரயில், | திருமுறைக் கோயில் பிரதிஷ்டை விழா-தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழா. |
| ,, | (9) ஸ்ரீ வாய்மூர்நாதர் கோயில், திருவாய்மூர். | நூல் நிலையத் திறப்பு விழாவும், திருமறை பிரதிஷ்டை விழாவும். |
| ,, | (10) ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், எட்டிகுடி. | யாத்ரீகர்கள் விடுதி கால்கோள் விழா. |
| ,, | (11) ஸ்ரீ இரத்தினகிரீசுவரர் கோயில், திருநாட்டியத்தான்குடி. | தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழாவும், திருமுறைப் பிரதிஷ்டை விழாவும். |
| 10-8-59 | (12) ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி கோயில், கீழ்வேளூர். | திருமுறைப் பிரதிஷ்டை விழாவும், தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழாவும். |
| ,, | (13) ஸ்ரீ தேவபுரீசுவரர் கோயில், தேவூர். | திருமுறைக் கோயில் பிரதிஷ்டையும், தேவாரக் கல்வெட்டுத் திறப்பு விழாவும். |
| ,, | (14) ஸ்ரீ பாலா அவுஷதீசுரர் கோயில், திருத்துறைப்பூண்டி. | பிள்ளைகளுக்குப் பால் வழங்கு விழா. |

---

திருநெல்வேலி தாலுக்கா பாளையங்கோட்டை ஸ்ரீ திருபுராந்தீசுவரர் கோயிலில் 31-7-59 வெள்ளிக்கிழமை சோமவார மண்டபத்தில் பன்னிரு திருமுறைத் திருக்கோயில் திறப்புவிழா, கூட்டுவழிபாட்டுப் பொன்விழா, பெரிய புராண நிறைவுவிழா ஆகிய முப்பெரும் சைவப்பெரு விழாக்கள் நெல்லைச் சைவப்புரவலர் வள்ளல் உயர்திரு சி. ச. அருணாசலம் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமுறைக் கோயிலை யானையின்மேல் வைத்து சிவன் கோயில் பெருமாள் கோயில் தேர்வீதிகளின் வழியாகத் திருமுறை ஊர்வலம் வந்தபொழுது சைவ அன்பர்கள் தத்தம் வீட்டு வாசல்களில் கோலமிட்டும் மங்கல விளக்கேற்றியும் அணி செய்திருந்தார்கள்.

திருநெல்வேலி மாவட்ட உதவி ஆணையர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் பன்னிரு திருமுறைக் கோயிலை திறந்துவைத்து, திருமுறைகளின் சிறப்பைப்பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். பாளையங்கோட்டை நகரமன்ற ஆணையாளர் உயர்திரு பி. சிவகுரு நாதன் செட்டியார், பி. ஏ., பி. எல்., அவர்கள், வித்துவான் திருக்குறள்மணி உயர்திரு சு. க. நவநீத கிருஷ்ணன், பேராசிரியர் உயர்திரு பு. சி. புன்னைவனநாத முதலியார், பாளையங்கோட்டை நகர மன்றத் தலைவர் உயர்திரு எம். எஸ். மகராச பிள்ளை அவர்கள், அப்பர் அருட்பணி மன்ற அமைச்சர் உயர்திரு டி. எம். பேச்சியப்பன் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

# பகழிக்கூத்தர்

பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவல் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடன்(அ)ப்
பாவா வாவென் றுனைப் போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளரும் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

இந்தப் பாட்டைப்படாத முருகன் தொண்டர் எவருமில்லை; அதைக் கேட்டு உருகாத நெஞ்சமுமில்லை; இந்தப் பாடல் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் உள்ளது என்பதை அறியாதாரும் இருக்கமுடியாது. கல் நெஞ்சமும் கரையவல்ல இந்நூலை யாத்த பெரியார் யார்? அவர் வரலாறு என்ன? இப்பாமாலையைப் புனையக்காரணம் ஏதேனும் உண்டோ? இதை ஓதுவதின் பயன் தான் யாது? இன்னோரன்ன பிற கேள்விகள் எழுவது இயற்கையே.

பிள்ளைத் தமிழில் ஏதாவது ஒரு பாடல் பாடுங்கள் என்று ஒருவரைக் கேட்டால் உடனே மேற்கண்ட திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்ப் பாடலைத்தான் பாடுவார். ஆதலின் அதில் ஏதோ ஒரு மகிமை இருக்கவேண்டும் அல்லவா? பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடிய அப் புலவர் பெருமான் ஒரு வைணவர் என்று கூறினல் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள அவா எழத்தான் செய்யும்.

செந்தமிழின் திறம் வளர்த்த சேதுமன்னர்களுக்கு இருப்பிடம் இராமநாதபுரம். அவ்வூர்க்கருகிலே சன்னுசிக் கிராமம் உள்ளது. வைணவ அந்தணர்கள் வாழும் சிற்றூர். தர்ப்பாதனர் என்று ஒருவர் இருந்தார். திருப்புல்லணையில் (தர்ப்பசயனத்தில்) திருக்கண் வளரும் இராமபிரானுக்குள்ள தர்ப்பாதனர் என்ற திருநாமத்தையே அவருக்கு இட்டனர். சேதுநாட்டுப் புகலூரிலுள்ள ஐயனர் அவருக்குக் குலதெய்வம். அத்தெய்வத்தை அரிகர புத்திரர், பகழிக் கூத்தர் என்றும் வழங்குவர். தர்ப்பாதனருடைய மைந்தருக்கு **பகழிக் கூத்தர்** என்று தன் குலதெய்வத்தின் பெயரிட்டார். அம்மகனுர் இளமையிலேயே வடமொழி, தமிழ் மொழி நூல்களையும் ஐயந்திரிபறக்கற்றுர். கவிபாடும் வல்லமையும் பெற்றுர். இறைவனையே பாடவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் குடிகொண்டது. எந்த தெய்வத்தைப் பாடுவது? யார் அருள்கிட்டுமோ அவரையே பாடலாம் என்ற முடிவுக்கு வந்தார். அதற்கு ஒருவழியும், வாய்ப்பும் வர வேண்டும் காலத்தை எதிர்நோக்கி யிருந்தார். இறைவன் அருள் எளிதில் கைகூடிவிடுமா?

பகழிக் கூத்தருக்கு வயிற்று வலியுண்டாயிற்று. அது அவருக்கு ஆற்றொணுத தொல்லை தந்தது. அந்தக் கொடிய நோய்க்கு எல்லை தான் கிடையாதா என்று மனம் நொந்து துடிதுடித்தார். மணி மந்திர மருந்து முயற்சிகள் யாதும் பயனில்லாது போயின. சூலைநோய் வளர்ந்ததே யொழியக் குறையவில்லை. ஆற்றேன் அடியேன் என்று அலறிக் கதறிக் கண்ணீர் பெருக்கிக் கண்ணுறங்கினுர் ஓர் இரவில். ஒரு கனக்கண்டார். திருச்செந்தூர் திரிசுதந்திரர் ஒருவர் அவர் முன்னின்றுர். பகழிக் கூத்தர், "யார் நீவிர்? என்ன வேண்டும் உமக்கு?" என, அவரும் "செந்திலிருந்து போந்தேன். பிள்ளைத் தமிழில் பேரவா எமக்கு அதிகம்," என்று சொல்லி எழுதிய ஏடு ஒன்றும், இலைவிபூதியும் அளித்தார். கனவுகலைந்து கண்விழித்தார் பகழிக் கூத்தர். தலையணைமேல் ஏடும், இலைத்திருநீறும் கண்டார்; திருநீற்றை யணிந்தார் ஏட்டைப் படித்தார். பின்வரும் பாடல்:-


பூமாது போற்றும் புகழ்பகழிக் கூத்தாஉன்
பாமாலை கேட்கயாம் பற்றேமா—ஏமம்
கொடுக்க அறியேமா கூற்றுவன் வாராமல்
தடுக்க அறியேமா தாம்.

அவ்வளவில் மெய்ம்மயிர்க் கூச்செறிந்தது;

நெஞ்சம் நெகிழ்ந்தது. முருகா! குமரா! குகா! சரவணபவா! கந்தா! கடம்பா! கார்த்திகேயா! வடிவேலா! என்றெல்லாம் சொல்லி அலறினர். வயிற்று வலியும் மறைந்தது. முருகன் திருவருளை நினைந்து நினைந்து நெக்குருகினர். அவன் அருளிய பாட்டின் முதற் சொல்லான "பூமாது" என்பதை வைத்துத் தொடங்கி பிள்ளைத் தமிழைப்பாடி முடித்தார். திருச்சீரலைவாய் சென்று செந்திலாண்டவன் திருமுன் அரங்கேற்ற எண்ணி அங்கு போய்ச் சேர்ந்தார்; அங்குள்ளாரிடம் எண்ணத்தைச் சொன்னர்; எவரும் கவனிக்கவில்லை. கவலையுடன் கண்ணுறங்கினர். முருகன் கனவில் தோன்றி 'ஆற்றார் ஆலின் கீழ் போய் அமர்ந்திரு' என்று ஆணையிட, பகழிக் கூத்தரும் அவ்வாறே செய்தார். அதே இரவில் குலசேகரன்பட்டினத்திலுள்ள காத்த பெருமாள்மூப்பனர் கனவில் தோன்றி பிள்ளைத் தமிழ் பாடிக் கொண்டு வந்திருக்கும் பகழிக் கூத்தரை ஆதரிக்குமாறு பணித்தார். மூப்பனர் காலையில் ஆற்றார் ஆலடியின் கீழ் அமர்ந்துள்ள பகழிக் கூத்தரைக் கண்டு வணங்கினர். தம்பல்லக்கில் அவரை ஏற்றிக் கொண்டு செந்திலம்பதியை அடைந்தார். பிள்ளைத் தமிழை யானைமேல் வைத்து நகர் வலம் செய்வித்தார். முருகன் திருமுன் அரங்கேற்றம் நடந்தது. அவ்வமயம் வானெலியினின்றும் எழுந்தது ஒரு பாடல்

செந்தமிழ்க்கு வாய்த்த திருச்செந்தி லம்பதியில்
கந்தனுக்குப் பிள்ளைக்கவி செய்தான்—சொந்தத்
திருமார்பு சேர்மார்பன் தேர்ப்பாகன் வண்மை
திருமால் பகழிக்கூத் தன்.

காத்தபெருமாள் மூப்பனரும், பகழிக் கூத்தரும் காலந்தவருது கந்தனை வந்தித்து வழிபாடாற்றி வருவாராயினர். ஒருநாள் தெருவில் தொண்டர்கள் திருப்புகழ் முழக்கம் செய்தனர். இருவரும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கைகூப்பி மெய்மறந்து நின்றனர். அவ்வளவில் இறைவன் தன் திருவடி நீழலில் அவர்களைச் சேர்த்துக் கொண்டான். உயிர்ப்பிணி, உடற்பிணி, நீக்க விழைபவர்கள் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழை ஒதி உய்வார்களாக.



திருப்புகலூர் அக்கினீசுவரர் கோயில் கும்பாபிஷேகம்

# சிவ விஷ்ணுத்தல அட்டவணை

## சிவத்தலங்கள்

| | தலம். (1) | இறைவன் இறைவி. (2) | பாடல். (3) | இரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|

### கொங்கு நாடு

#### சேலம் மாவட்டம்.

| | தலம். (1) | இறைவன் இறைவி. (2) | பாடல். (3) | இரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| 1 | கொடிமாடச்செங் குன்றூர் (திருச்செங்கோடு). | அர்த்தநாரீசுவரர் பாகம்பிரியாளம்மை. | சம்பந்தர் | சங்கரிதுர்க்கம் | ஆலயம் உயரிய மலையின்மேல் இருக்கின்றது. விறன்மிண்ட நாயனருடைய தலம். ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி இருக்கிறது. சுப்ரமண்யர் சந்நிதி சிறப்பு. மேற்குப்பார்த்த சந்நிதி. |

#### கோயம்புத்தூர் மாவட்டம்

| | தலம். (1) | இறைவன் இறைவி. (2) | பாடல். (3) | இரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| 2 | அவிநாசி | அவிநாசியீசுவரர் கருணாம்பிகை. | சுந்தரர் | திருப்பூர் | சுந்தரர் முதலைவாயினின்றும் அந்தணப் பிள்ளையை மீட்ட தலம்: |
| 3 | திருநணா (பவானி) | சங்கமுகநாதேசுவரர் வேதாம்பிகை. | சம்பந்தர் | ஈரோடு | குபேரன், விசுவாமித்திரர், பராசரர் முதலியோர் வழிபட்ட தலம்: ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி இருக்கிறது. |
| 4 | திருப்பாண்டிக் கொடுமுடி. | கொடுமுடிநாதர் பண்மொழிநாயகி. | சம்பந்தர், அப்பர் சுந்தரர். | கொடுமுடி | சுந்தரர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளிய தலம். ஸ்ரீரங்கநாதர் சந்நிதி இருக்கிறது. |
| 5 | திருமுருகன் பூண்டி | முருகநாதேசுவரர் முயங்குபூண்முலையம்மை. | சுந்தரர் | திருப்பூர் | துருவாச முனிக்கு பிரமதாண்டவ தரிசனம் தந்த நடராசர் சந்நிதி சிறப்பு. முருகக்கடவுள் வழிபட்ட காரணமாக முருகன்பூண்டி எனப்பெயர் வந்தது. சுந்தரருக்கு இறைவன் இருக்குமிடத்தைக் காண்பித்த கூப்பிடு பிள்ளையார் கொஞ்சம் தொலைவில் இருக்கிறார். |

#### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | தலம். (1) | இறைவன் இறைவி. (2) | பாடல். (3) | இரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| 6 | கருவூர் (ஆநிலை) | பசுபதீசுவரர். கிருபாநாயகி. | சம்பந்தர் | கரூர் | திருவிசைப்பா பாடிய கருவூர்த்தேவர் அவதரித்த தலம். அவருக்குத் தனி சந்நிதி இருக்கிறது. எறிபத்த நாயனருடைய தலம். சிவகாமியாண்டார் இருந்த இடம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 7 | வெஞ்சமாக்கூடல் ... | விகிர்தநாதேசுரர் விகிர்தநாயகி. | சுந்தரர் ... | கரூர் ... | வெஞ்சன் என்னும் அசுரன் வழிபட்ட தலம். சிவபெருமான் தம் பிள்ளைகளை ஈடுகாட்டி பொன்வாங்கி சுந்தர மூர்த்திக்கு அருளிய தலம். |

## ஈழ நாடு

## (இலங்கை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | திருக்கேதீச்சுரம் ... | கேதீசுரர் கௌரியம்பிகை. | சம்பந்தர், சுந்தரர் ... | தலைமன்னர் ... | பிருகு முனிவர் பூசித்த தலம். |
| 2 | திருக்கோணமலை ... | கோணேசுரர் மாதுமையாளம்மை. | சம்பந்தர் ... | திருக்கோணமலை ... | தேவேந்திரன் பூசித்த தலம். தக்ஷிண கைலாயம் என்றும் சொல்லப்படும். |

## வட நாடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்). | பருப்பதநாதர் பருப்பதநாயகி. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | நந்தியால் (66 மைல்). | நந்திதேவர் பர்வதவடிவமாகி சிவபெருமானைத் தாங்கிக்கொண்டிருக்கும் தலம். மகாசிவராத்திரி சிறப்பு. |
| 2 | திருக்கேதாரம் ... | கேதாரேசுரர். கேதார கௌரியம்மை. | சம்பந்தர், சுந்தரர் ... | ...... | இமயமலையில் உள்ளது. ஆறுமாதம் தேவர்களாலும், ஆறுமாதம் மானிடர்களாலும் பூசிக்கப்படும் தலம். பிருங்கி முனிவருக்காக பார்வதி பரமசிவனைப் பூசித்து வாமபாகம் பெற்ற தலம். |
| 3 | அனேகதங்காபதம் ... | அருள்மன்னேசுரர் மனோன்மணியம்மை. | சம்பந்தர் ... | ...... | வழி சரியாகத் தெரியவில்லை. சூரியனும் சந்திரனும் பூசித்த தலம். அம்பிகை தவம் செய்த கௌரிகுண்டம் இது எனப்படுகிறது. |
| 4 | இந்திரநீல பருப்பதம். | நீலாகல நாதர் நீலாம்பிகை. | சம்பந்தர் ... | ...... | வழி சரியாகத் தெரியவில்லை. தேவேந்திரனால் பூசிக்கப்பட்ட தலம். |
| 5 | திருக்கயிலாயம் ... | பரமசிவன் பார்வதியம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | ...... | நம் கண்களுக்குப் புலப்படாது. அப்பருக்கு கைலாய தரிசனம் திருவையாற்றில் கிடைத்தது. |

# பாடல் பெற்ற சிவத்தலங்கள்

துங்கவட கயிலாய முதலா வைந்து
துளுவொன்று தொண்டை வடநாட் டெண்ணான்கு
தங்குநடு நாட்டிருபத் திரண்டு பொன்னித்
தலநூற்றுத் தொண்ணூறு மலைநாட் டொன்று
கொங்கேழு சிங்களத்தி லிரண்டு வைகை
கொழிதமிழ்நாட் டீரேழு முதலாஞ் சூலச்
செங்கையார் தலமிருநூற் றெழுபா னென்கிற்
றெக்கிணபாற் கயிலாயந் திருக்குற்றாலம்.

[குறிப்பு—திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகம் கல்லில் பொறிக்கப்பெற்றதும் பின்னால் கண்டுபிடிக்கப்பட்டதுமான திருவிடைவாய் என்பதையும் சேர்த்துத் தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்கள் 275 ஆகும்-

## சப்தவிடங்க தலங்கள்

1. திருவாரூர் - வீதி விடங்கர் - அசபாநடனம்.
2. திருநள்ளாறு - நகரவிடங்கர் - உன்மத்த நடனம்.
3. திருநாகைக்காரோணம் - சுந்தரவிடங்கர் - வீசிநடனம்.
4. திருக்காருயில் - ஆதிவிடங்கர் - குக்குடநடனம்.
5. திருக்கோளிலி - அவனிவிடங்கர் - பிருங்க நடனம்.
6. திருவாய்மூர் - நீலவிடங்கர் - கமல நடனம்.
7. திருமறைக்காடு - புவனிவிடங்கர் - ஹம்சபாத நடனம் -

## பஞ்ச பூத தலங்கள்

1. திருவாரூர், காஞ்சிபுரம் – பிருதிவி.
2. திருவானைக்கா - அப்பு.
3. திருவண்ணாமலை – தேயு.
4. திருக்காளத்தி – வாயு.
5. சிதம்பரம் - ஆகாசம்.

## பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு - இரத்தின சபை.
2. சிதம்பரம் - கனகசபை (பொன்னம்பலம்).
3. மதுரை - இரஜத சபை (வெள்ளியம்பலம்).
4. திருநெல்வேலி - தாமிர சபை.
5. திருக்குற்றாலம் - சித்திரசபை.

## தேவாரம் பெற்ற கோயிலுக்குள் தேவாரம் பெற்ற கோயில்

1. திருவாரூர் அரநெறி - திருவாரூர்.
2. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் - திருப்புகலூர்.
3. மீயச்சூர் இளங்கோயில் - மீயச்சூர்.

## அட்ட வீரட்டானங்கள்

1. திருக்கண்டியூர் - பிரமன் சிரங்கொய்தது.
3. திருக்கோவலூர் - அந்தகாசுரனைச் சங்கரித்தது.
3. திரு அதிகை - திரிபுரத்தை எரித்தது.
4. திருப்பறியலூர் - தக்கன் சிரங்கொய்தது.
5. திருவிற்குடி - சலந்தராசுரனைச் சங்கரித்தது.
6. வழுவூர் – யானையை உரித்தது.
7. திருக்குறுக்கை - காமனை எரித்தது.
8. திருக்கடவூர் - யமனை உதைத்தது.

## சப்தஸ்தான க்ஷேத்திரங்கள்

1. திருவையாறு.
2. திருப்பழனம்.
3. திருச்சோற்றுத்துறை.
4. திருவேதிகுடி.
5. திருக்கண்டியூர்.
6. திருப்பூந்துருத்தி.
7. திருநெய்த்தானம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மூவர் பாடலுள்ளவை | ... | 44 |
| 2. | சம்பந்தர், அப்பர் பாடலுள்ளவை | ... | 52 |
| 3. | சம்பந்தர், சுந்தரர் பாடலுள்ளவை | ... | 13 |
| 4. | அப்பர், சுந்தரர் பாடலுள்ளவை | ... | 2 |
| 5. | சம்பந்தர் பாடல்மாத்திரம் உள்ளவை | ... | 111 |
| 6. | அப்பர் பாடல்மாத்திரம் உள்ளவை | ... | 28 |
| 7. | சுந்தரர் பாடல்மாத்திரம் உள்ளவை | ... | 25 |
| | | | 275 |

| | | | |
|---|---|---|---|
| 1. | மூவரால் சொல்லப்பட்ட தலங்கள் | ... | 97 |
| 2. | சம்பந்தர், அப்பர் ஆகிய இருவராற் சொல்லப் பெற்றன | .. | 87 |
| 3. | சம்பந்தர், சுந்தரரால் சொல்லப் பெற்ற தலங்கள் | ... | 6 |
| 4. | அப்பர், சுந்தரர் இவர்களால் சொல்லப் பெற்றன | ... | 17 |
| 5. | சம்பந்தரால் மட்டும் சொல்லப்பட்டன | ... | 40 |
| 6. | அப்பரால் மட்டும் சொல்லப்பட்டன | ... | 18 |
| 7. | சுந்தரரால் மட்டும் சொல்லப்பட்டன | ... | 10 |
| | | | 275 |

## காசிக்கு சமானமாகச் சொல்லப்படும் தலங்கள்

1. திருவெண்காடு.
2. திருவையாறு.
3. திருமயிலாடுதுறை (மாயூரம்).
4. திருவிடைமருதூர்.
5. திருச்சாய்க்காடு.
6. திருவாஞ்சியம்.

## புலியூர்கள் (வியாக்ரபாத முனிவர் வழிபட்ட தலங்கள்)

1. பெரும்பற்றப்புலியூர் - சிதம்பரம்.
2. திருப்பாதிரிப்புலியூர்.
3. ஓமாம்புலியூர்.
4. எருக்கத்தம்புலியூர்.
5. பெரும்புலியூர்.

## ஆதிசேஷன் வழிபட்ட தலங்கள்

1. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேசுவரசுவாமி கோயில்).
2. திருநாகேச்சுரம்.
3. திருப்பாம்புரம்.
4. திருநாகைக்காரோணம்.

## காயாரோகண தலங்கள்

1. கச்சிக்காரோணம்.
2. குடந்தைக்காரோணம்.
3. நாகைக்காரோணம்.

## மயானங்கள்

1. கச்சிமயானம்.
2. கடவூர் மயானம்.
3. நாலூர் மயானம்.

## தட்சண கைலாசம் என்று சொல்லப்படும் தலங்கள்—மூன்று

1. திருக்காளத்தி.
2. திரிசிராப்பள்ளி.
3. திருக்கோணமலை.

## பஞ்சநாதம்

1. விஸ்வநாதம்.
2. சோமநாதம்.
3. ஜகந்நாதம்.
4. இராமநாதம்.
5. வைத்தியநாதம்.

## தாண்டவ சிறப்புத்தலங்கள்

தில்லைச்சித்திரக்கூடம், பேரூர் — ஆநந்த தாண்டவம்.
ஆரூர் — அசபாதாண்டவம்.
மதுரை — ஞானசுந்தர தாண்டவம்.
திருப்புக்கொளியூர் — ஊர்த்துவ தாண்டவம்.
திருமுருகன்பூண்டி — பிரமதாண்டவம்.

## ஆலய விசேடங்கள்

ஐங்கரனாலயம் - திருவலஞ்சுழி.
குமரனாலயம் - திருவேரகம்.
சண்டேசுரராலயம் - சேய்நலூர்.
விடையினாலயம் - ஆவடுதுறை.
வடுகனாலயம் - சீர்காழி.
சபாபதி ஆலயம் - தில்லை.
தியாகேசர் ஆலயம் - திருவாரூர்.

# அறுபத்து மூன்று நாயன்மார்கள், ஊர், திருநட்சத்திரம்

| | | | |
|---|---|---|---|
| 1. சுந்தரர் | ... | திருநாவலூர் | ஆடி - சுவாதி. |
| 2. சடையனார் | ... | ,, | மார்கழி - திருவாதிரை. |
| 3. இசைஞானியார் | ... | ,, | சித்திரை - சித்திரை |
| 4. அப்பர் | ... | திருவாமூர் | சித்திரை - சதயம். |
| 5. திருநீலகண்டர் | ... | சிதம்பரம் | தை - விசாகம். |
| 6. இயற்பகை | ... | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி - உத்திரம். |
| 7. அமர்நீதி | ... | பழையாறை | ஆனி - பூரம். |
| 8 எறிபத்தர் | ... | கரூர் | மாசி - அத்தம். |
| 9. ஏனாதிநாதர் | ... | எயினனூர் (திருச்சேறை யருகே) | புரட்டாசி - உத்தராடம்- |
| 10. குங்கிலியக்கலயர் | ... | திருக்கடவூர் | ஆவணி - மூலம். |
| 11. காரியார் | ... | ,, | மாசி - பூராடம். |
| 12. அரிவாட்டாயர் | ... | கணமங்கலம் (தண்டலைநீணெறி யருகே). | தை - திருவாதிரை. |
| 13. முருகர் | ... | திருப்புகலூர் | வைகாசி - மூலம். |
| 14 உருத்திரபசுபதியார் | ... | திருத்தலையூர் (மாயூரம் அருகே) | புரட்டாசி - அசுவதி. |
| 15. திருநாளைப்போவார் | ... | ஆதனூர் (திருப்புன்கூர்) | புரட்டாசி - உரோகிணி. |
| 16. சண்டேசுரர் | ... | திருச்சேய்ஞலூர் | தை - உத்திரம். |
| 17. அப்பூதியடிகள் | ... | திங்களூர் (திருப்பழனம் அருகே) | தை - சதயம். |
| 18. திருநீலநக்கர் | ... | சாத்தமங்கை (திருமருகல் அருகே) | வைகாசி - மூலம். |
| 19. நமிநந்தியடிகள் | ... | ஏமப்பேறூர் (திருஆரூர் அருகே) | வைகாசி - பூசம். |
| 20. திருஞான சம்பந்தர் | ... | சீர்காழி | வைகாசி - மூலம். |
| 21. கணநாதர் | ... | ,, | பங்குனி - திருவாதிரை. |
| 22. ஏயர்கோன் கலிக்காமர் | ... | திருப்பெருமங்கலம் (திருப்புன்கூர் அருகே). | ஆனி - இரேவதி. |
| 23. தண்டியடிகள் | ... | திருவாரூர் | பங்குனி - சதயம். |
| 24. சோமாசிமாறர் | .. | அம்பர் | வைகாசி - ஆயிலியம். |
| 25. சிறப்புலியார் | ... | திருஆக்கூர் | கார்த்திகை - பூராடம். |
| 26. சிறுத்தொண்டர் | ... | திருச்செங்காட்டங்குடி | சித்திரை - பரணி. |
| 27. புகழ்ச்சோழர் | ... | உறையூர் (திருச்சி) | ஆடி - கார்த்திகை. |
| 28. அதிபத்தர் | ... | நாகைப்பட்டினம் | ஆவணி - ஆயிலியம். |
| 29. கலிக்கம்பர் | ... | பெண்ணாகடம் | தை - இரேவதி |
| 30. சத்தியார் | ... | வரிஞ்சியூர் (கீழ்வேளூர்க்கருகே) | ஐப்பசி - பூசம். |
| 31. முனையடுவார் | ... | திருநீடூர் | பங்குனி - பூசம். |
| 32. செருத்துணையார் | ... | கீழத்தஞ்சாவூர் (திருமருகல் அருகே). | ஆவணி - பூசம். |
| 33. கோட்புலியார் | ... | திருநாட்டியத்தான்குடி | ஆடி - கேட்டை. |
| 34. திருநீலகண்டயாழ்ப்பாணர் | ... | எருக்கத்தம்புலியூர் | வைகாசி - மூலம். |
| 35. கோச்செங்கட்சோழர் | ... | திருஆனைக்கா | மாசி - சதயம். |
| 36. காரைக்காலம்மையார் | ... | காரைக்கால் | பங்குனி - சுவாதி. |
| 37. திருமூலர் | ... | சாத்தனூர் (திருவாவடுதுறை அருகே). | ஐப்பசி - அசுவதி. |
| 38. கணம்புல்லர் | ... | இருக்குவேளூர் (சிதம்பரம் அருகே) | கார்த்திகை - கார்த்திகை. |
| 39. நரசிங்கமுனையரையர் | ... | திருநாவலூர் | புரட்டாசி - சதயம். |

| | | | |
|---|---|---|---|
| 40. | கழற்சிங்கர் ... | திருவாரூர் | வைகாசி – பரணி. |
| 41. | இளையான்குடிமாறர் ... | இளையான்குடி | ஆவணி - மகம். |
| 42. | மானக்கஞ்சாறர் ... | கஞ்சாறூர் (மாயவரம் அருகே ஆனதாண்டவபுரம்). | மார்கழி - சுவாதி. |
| 43. | சாக்கியர் ... | திருச்சங்கமங்கை (காஞ்சிபுரம்) | மார்கழி – பூராடம். |
| 44. | கூற்றுவர் ... | பொன்விளைந்தகளத்தூர் | ஆடி - திருவாதிரை. |
| 45. | புகழ்த்துணையார் ... | அரசிற்கரைபுத்தூர் | ஆவணி - ஆயிலியம். |
| 46. | நேசர் ... | கூறைநாடு (காம்பீலி) (மாயூரம்) | பங்குனி - உரோகிணி. |
| 47. | மெய்ப்பொருளார் ... | திருக்கோவலூர் | கார்த்திகை - உத்திரம். |
| 48. | விறன்மிண்டர் ... | செங்குன்றூர் (கேரளம்) | சித்திரை - திருவாதிரை. |
| 49. | கழறிற்றறிவார் ... | திருஅஞ்சைக்களம் (கேரளம்) | ஆடி - சுவாதி. |
| 50. | ஆனுயர் ... | திருமங்கலம் (திருஆனைக்காவி விருந்து 7 மைல்). | கார்த்திகை - அத்தம். |
| 51. | பெருமிழலைக்குறும்பர் ... | தேவர்மலை-மிழலை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) (புதுக்கோட்டை வட்டம்). | ஆடி - சித்திரை. |
| 52. | கண்ணப்பர் ... | திருக்காளத்தி (ஆந்திரா). | தை - மிருகசிரிடம். |
| 53. | மூர்த்தியார் ... | மதுரை | ஆடி - கார்த்திகை. |
| 54. | நின்றசீர்நெடுமாறர் ... | ,, | ஐப்பசி - பரணி. |
| 55 | மங்கையர்க்கரசியார் ... | மதுரை (பழையாறை) | சித்திரை - உரோகிணி. |
| 56. | குலச்சிறையார் ... | மணமேற்குடி (திருப்புனவாயிலி விருந்து 5 மைல்). | ஆவணி - அனுடம். |
| 57- | திருக்குறிப்புத் தொண்டர் ... | காஞ்சிபுரம் | சித்திரை - சுவாதி. |
| 58. | ஐயடிகள் காடவர் கோன் ... | ,, | ஐப்பசி - மூலம். |
| 59. | மூர்க்கர் ... | திருவேற்காடு | கார்த்திகை – மூலம். |
| 60. | கலியர் ... | திருவொற்றியூர் | ஆடி - கேட்டை. |
| 61. | வாயிலார் ... | மயிலாப்பூர் | மார்கழி – இரேவதி. |
| 62. | பூசலார் ... | திண்ணனூர் | ஐப்பசி - அனுடம். |
| 63. | இடங்கழியார் ... | கொடும்பாளூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) (புதுக்கோட்டை வட்டம்). | ஐப்பசி - கார்த்திகை. |

## 18 சித்தர்கள்

| | | |
|---|---|---|
| 1. | நந்திசர் ... | காசி. |
| 2. | போகர் ... | பழனி. |
| 3. | திருமூலர் ... | சிதம்பரம். |
| 4. | பதஞ்சலி ... | சேது. |
| 5. | தன்வந்திரி ... | வைத்தீசுவரன் கோயில். |
| 6. | கரூர்சித்தர் ... | கரூர். |
| 7. | சுந்தரானந்தர் ... | மதுரை. |
| 8. | மச்சமுனிவர் ... | திருப்பரங்குன்றம். |
| 9. | இராமதேவர் ... | அழகர்கோயில். |
| 10. | சட்டமுனிவர் ... | திருவரங்கம். |
| 11. | கமலமுனிவர் ... | திருவாரூர். |
| 12. | வான்மீகர் ... | எட்டிகுடி. |
| 13. | குதம்பைச்சித்தர் ... | மாயூரம். |
| 14, | பாம்பாட்டிச்சித்தர் ... | முதுகுன்றம் (விருத்தாசலம்). |
| 15. | இடைக்காட்டுச்சித்தர் - | திருவண்ணாமலை. |
| 16. | கோரக்கர் ... | பேரூர். |
| 17. | கொங்கணவர் ... | திருப்பதி. |
| 18. | கும்பமுனிவர் ... | திருவனந்தபுரம். |

...MARA PUBLIC LIB...